# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. II    Issue 9    December 2012

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்


பக்கம்

இம்மாதச் செய்தி ..... 2

லைப் டிவைன் ..... 3

சாவித்ரி ..... 24

யோக வாழ்க்கை விளக்கம் VI ..... 26

பூரணயோகம் - முதல் வாயில்கள் ..... 32

அஜெண்டா ..... 35

Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 2) ... 37

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ..... 50

யாருக்காக ..... 55

ஸ்ரீ அரவிந்தரும் மரபும் ..... 63


## அறிவிப்பு

டிசம்பர் 2012 இதழுடன் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக சந்தாவினைப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

பெண்மை மனத்துள் ஆண்மையை மௌனமாக பூர்த்தி செய்வது பக்தி.

ஆண்மை திருமணத்தில் தன்னை அழித்துக் கொள்கிறது.

பெண்ணின் பெருமை மனிதனை சத்புருஷனாக்கும். அதனினும் பெரியவள் குதர்க்கவாதி. அவனை அசத் ஆக்குவாள்.

யோகத்திற்குரிய மனித அரங்கம் திருமணம்.

காதல் காலத்தைக் கடந்த வாழ்வின் யோகம்.

தன்னடக்கம் தரும் பண்பு, காதலை எழுப்பும் அர்ப்பணம்.

*இம்மாதச் செய்தி*

**நாடு ஒன்றுபட**

**தீண்டாமை**

**மனதில் அழிய வேண்டும்.**





# லைப் டிவைன்

கர்மயோகி

## 23. மனிதனுள் உள்ள இரட்டை ஆத்மா

பிரபஞ்சம் மனிதனை உருவாக்க முயல்கிறது. அது வித்தாகும். வித்து இருளில் புதைந்து உருவம் பெறாது இருக்கிறது. மனித வித்தான இது ஜோதியோ, ஞானமோ இல்லை. இது உறுதி. இது சுதந்திரமான உறுதியல்ல. பிரபஞ்ச இயக்கம் இதைத் தன் பிடியுள் பெற்றுள்ளது. இவ்வுறுதி ஜட வாழ்வில் அணு ரூபமாக இருக்கிறது. உள் சென்று கலந்து நிலவும் சக்தியான உறுதியிது. அது ஊமையான ஜடம், வேகமாக உந்தும் சக்தி. இது வாழ்வின் முதல் நிலை. அவ்வுறுதி அதற்கு அத்தாட்சி. இரண்டாம் நிலையின் வேர் ஆசை. அது மற்றதை ஆக்ரமிக்க ஆவலுடையதாயிருக்கிறது. அதன் திறமை அளவுக்குட்பட்டது. மூன்றாம் நிலையின் மொக்கு அன்பு. அன்பு மற்றதை ஆட்கொள்ள விரும்பும்பொழுது தன்னையும் பிறரால் ஆட்கொள்ளப் பிரியப்படுகிறது. பெறவும், தரவும் முயலும் செயலிது. அப்படியானால் 4ஆம் நிலை எது? சத்திய ஜீவிய வாழ்வு ஆத்மாக்களின் ஒற்றுமையின் அடிப்படையில் உள்ளது. மூல சக்தி இருளாகவும் உருவமற்றதாகவுமுள்ளது. தூய்மையாக, முழுமையாக வெளிவர வேண்டும். திட்பமான சக்தியின் ஆசை ஒளிமயமாகி பூர்த்தியாக வேண்டும். அன்பு பிறரை ஆட்கொள்ள முயன்று அவருடைய அன்புப்பிடியுள் நுழைகிறது. அதற்கு ஆழ்ந்துயர்ந்த திருப்தி வேண்டும். அது அன்பை அறிவால் பரிமாறுவதால் எழும்.

இதுவே 4ஆம் நிலையின் சிறந்த மலர். அதன் சிறப்பை இங்ஙனம் வெளிப்படுத்தும். மனிதன் ஆனந்தம் தேடுகிறான். பிரபஞ்சமும் பொருள்களில் ஆனந்தம் தேடுகிறது. இதனுள் அவற்றில் தேடுதலின் ரூபங்களும், கட்டங்களும் தெரியும். பொருளில் ஆனந்தம் ஜடத்தின் ஊமை உணர்வு. அது எதிரெதிரானதாக எழும். அதன் ஏற்றத்தாழ்வில் செயல்பட வேண்டும். இங்கு அது ஜோதிமயமான ஆத்ம பூரணம். வாழ்வின் ஏற்றம் தெய்வீக ஆனந்தம் பொருளில் நாடும் உயர்வு.

இவ்வுலகம் நாமறிவது போல் இருப்பதால், இது வேறு வகையாக இருக்க முடியாது. உலகம் சச்சிதானந்தம், முகமூடி தரித்துள்ளது. இது சச்சிதானந்த இயற்கைக்குரியது. எனவே இறைவனுடைய சக்தி உலகில் ஆனந்தம் பெறும். எங்கும் நிறை சுயஆனந்தம் பெறும். வாழ்வு சித் சக்தியினின்று எழும் சக்தி. எனவே அதன் எல்லா அசைவுகளின் இரகஸ்யம் மறைந்துள்ள ஆனந்தமாகும். ஆனந்தம் எல்லாவற்றிலும் ஆரம்பத்திலேயே இருப்பதாகும். எல்லா செயல்கட்கும் ஆனந்தமே காரணம், நோக்கம், இலக்கு. அகந்தையால் பிரிக்கப்படுவதால் ஆனந்தம் தவறுகிறது. திரை மறைவில் அது உள்ளது. தனக்கு எதிரானதாக அது தோன்றுகிறது. ஜீவன் மரணத்தால் மூடப்பட்டுள்ளது. ஜீவியம் உணர்வற்றதாக உள்ளது. சக்தியை நாம் திறனற்றதாகக் காண்கிறோம். உயிருள்ள பொருள்கட்கு இது திருப்தி தாராது. அவை சலனமற்றிருக்க முடியாது. பிரபஞ்ச ஆனந்தத்தைப் பெற்று தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். அது இரகஸ்ய முழுமையான ஆனந்தம். அதுவே மூலமான சச்சிதானந்தத்திற்குரிய ஆனந்தமுமாகும். சச்சிதானந்தம் கடந்ததும் உள்ளுறைவதுமாகும். இவ்வானந்தம் அனைத்தையும் தழுவியது. அனைத்தையும் தாங்கிப் பிடிப்பது, அனைத்தையும் அறிவது, ஆனந்தத்தை நாடுவதே வாழ்வின் அடிப்படையான உந்துதல். அதைக் கண்டு சொந்தமாக்கிப் பூரணம் பெறுவதே வாழ்வின் முழு நோக்கம்.



ஆனந்தம் என்ற தத்துவம் நம்மிடம் எங்குள்ளது? நம்முள் எந்தக் கரணத்தின் மூலம் அது வெளிப்படுகிறது? பிரபஞ்ச செயலில் அது வெளிப்படும் வகையென்ன? சித்-சக்தி வாழ்வாக வெளிப்படுகிறது என நாம் அறிவோம். வாழ்வைப் பிரபஞ்ச கரணமாக அது பயன்படுத்துகிறது என நாம் அறிவோம். சத்திய ஜீவியம் என்ற தத்துவம் மனத்தைக் கருவியாகப் பயன்படுத்துகிறது என நாம் அறிவோம். பிரபஞ்ச சிருஷ்டியில் 4 அம்சங்களைக் கொண்ட புருஷ தத்துவம் உண்டு என நாமறிவோம். அவை வாழ்வு, சித்-சக்தி, ஆனந்தம், சத்திய ஜீவியமாகும். சத்திய ஜீவியம் ஜடமான பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்துள்ளது. ஆனால் அது திரைக்குப் பின்னால் உள்ளது. நடக்கும் நிகழ்ச்சிகளின் பின்னால் சத்திய ஜீவியம் செயல்படுகிறது. கண்ணில் படாமல் அங்கு அது தன்னை வெளிப்படுத்துகிறது. மனம் சத்திய ஜீவியத்தின் உபகருவி. அதை சத்திய ஜீவியம் பயன்படுத்துகிறது. அதன் மூலம் சத்திய ஜீவியம் தன் செயலைப் பூர்த்தி செய்து கொள்கிறது. அதே போல் தெய்வீக சித்-சக்தி ஜடமான பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்துள்ளது. ஆனால் மறைந்துள்ளது. செயலின் தோற்றத்தின் பின் சத்திய ஜீவியம் இரகஸ்யமாகச் செயல்படுகிறது. அதுவும் அதன் உபகருவியான வாழ்வு மூலம் வெளிப்படுகிறது. ஜடம் என்ற தத்துவத்தை நாம் இதுவரை தனியாக ஆராயவில்லை. இங்கும் அது போன்ற தோற்றமிருப்பதை நாம் அறியலாம். தெய்வீக முழு வாழ்வு ஜடப்பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்துள்ளது. ஆனால் மறைந்துள்ளது. பொருள்களின் தோற்றத்திற்குப் பின்னால் அது மறைந்துள்ளது. ஆரம்பத்தில் அதன் உபகருவி வழி வெளிப்படுகிறது. பொருள், ஜீவனின் ரூபம். இது இங்கு உபகருவி. அப்படியானால், ஆனந்தமும் பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்திருக்க வேண்டும். அதுவும் மறைந்து செயல்படும். உள்ளபடி பொருள்களின் தோற்றத்தின் பின் அது தன்னைத்தான் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும். அது தன் உபகருவி மூலம் வெளிப்படும். மறைந்துள்ள ஆனந்தத்தை நாம் காண்போம். பிரபஞ்சத்தில் ஆனந்தம் அது போல் செயல்படும்.

அது போன்ற ஒன்று நம்முள் உள்ளது. சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட நோக்கில் நாம் அதை ஆத்மா என்கிறோம். அது மனம்; வாழ்வு ஆகியவற்றைக் கடந்த சைத்தியத் தத்துவம். அது உடல் இல்லை. ஆனால் அது தன்னுள் இவற்றின் – மனம், வாழ்வு, உடல் – சாரத்தைப் பெற்றுள்ளது. சாரம் மலரும் வாயில் அது. அது பிரம்மம், ஜோதி, அன்பு, சந்தோஷம் ஆகியவை குறிப்பாக ஆனந்தம் பெறும்படி மலர்கிறது. அது அழகைத் தேடுகிறது. ஜீவனின் உன்னத தூய்மையை நாடுகிறது. நம்முள் பிரபஞ்ச தத்துவங்கள் ஒவ்வொன்றும் இரண்டு நிலைகளில் உள்ளன. அதே போல் இதற்கும் இரு நிலைகள் உள்ளன. அவை இரு ஆத்மா, சைத்திய புருஷன். நமக்கு இரண்டு மனம் உண்டு. ஒன்று மேல் மனம். அது நம் பரிணாம அகந்தைக்குரியது. அது ஆழமற்ற மேலெழுந்த மனப்பான்மை. ஜடத்திலிருந்து நாம் பரிணாமத்தால் வெளி வருவதால் அது எழுந்தது. அடுத்தது அடி மனம். மேல் மனத்தின் வரையறையால் அது பாதிக்கப்படுவதில்லை. அது ஒளிமயமான, சக்திவாய்ந்த பெரியது. நம் மனத்தின் பர்சனாலிட்டிக்குப் பின்னால் உள்ள உண்மையான மனத்தின் ஜீவன் அது. அதை நாம் தவறுதலாக நாம் எனக் கொள்கிறோம். நமக்கு இரு வாழ்வுண்டு. ஒன்று உடலுள் செயல்படும் புற வாழ்வு, கடந்த காலத்தில் ஜடத்தின் பரிணாமத்தால் அது கட்டுண்டது. நம் பூத உடல் நாம் வாழும் உடல். அது பிறந்தது, இனி மரணமடையும். அடுத்தது அடிமன வாழ்வின் சக்தி. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே சிறைப்பட்ட வாழ்வில்லை அது. அது உண்மையான பிராணனின் ஜீவன், அது வாழ்வின் ரூபத்தின் பின்னாலுள்ளது. தவறுதலாக அறியாமையால் நாம் அதை நம் உண்மையான வாழ்வாகக் கொள்கிறோம். ஜடத்தின் ஜீவனிலும் இரு நிலைகள் உள்ளன. உடலுக்குப் பின்னால் சூட்சுமமான ஜடப் பொருளுண்டு. அது நம் பொருளை உற்பத்தி செய்யும் வாழ்வு. அது ஜடத்தின் பொருள் மட்டுமல்ல, வாழ்வின் பொருளாகும், மனத்தின் பொருளுமாகும். அதுவே நம் உண்மையான பொருளாகும். அது உடலுருவத்தை ஆதரிக்கிறது. நாம் தவறுதலாக அதை நம் ஆத்மா



எனவும் முழு உடல் எனவும் கொள்கிறோம். அதே போல் நமக்கு இரு சைத்திய நிலைகள் உள்ளன. ஒன்று மேல் மன ஆசையின் ஆத்மா. அது நம் ஆசைகள், உணர்ச்சிகள், அழகுணர்ச்சி ஆகியவற்றில் வேலை செய்கிறது. அது மனசக்தியை நாடுகிறது. சந்தோஷம், ஞானம், ஜோதியின் தூய்மையான சக்தி அது. அடிமனத்திற்குரிய சைத்திய புருஷனுண்டு. அது சந்தோஷம், ஜோதி, அன்பிற்குரிய தூய்மையான சக்தி. ஜீவனின் உன்னதமான சாரத்தை நாடுகிறது. புற சைத்திய வாழ்வின் பின்னாலுள்ள உண்மையான ஆத்மா அது. அது ஒருவனுக்கிருந்தால் அவனுக்கு ஆத்மாவுண்டு என்கிறோம். அது புற ஆத்மீக வாழ்வில் பல சமயங்களில் காணப்படுவதில்லை. அப்படிப்பட்டவர்க்கு ஆத்மா இல்லை என்கிறோம்.

நம் வாழ்வுக்கு ரூபங்களுண்டு. அவை ஜீவனின் ரூபங்கள். அவை புறத்திற்குரியன. பெரிய, உண்மையான, தனித்தன்மைக்குரியவை அடிமனத்தைச் சேர்ந்தவை. சிறிய அகந்தையின் ரூபங்கள் சாஸ்வதமானவை. மறைந்துள்ள ஜீவனின் பகுதிகள் மனிதனின் தனித்தன்மையைப் பெற்றுள்ளன. அது பிரபஞ்சத்திற்கு அருகாமையிலுள்ளது. அது பிரபஞ்சத்தைத் தொடுகிறது. மேலும் அது பிரபஞ்சத்துடன் நெருங்கிய தொடர்பும் உறவும் கொண்டது. பிரபஞ்ச மனத்திற்குப் பிரபஞ்ச ஞானமுண்டு. நம்முள் உள்ள அடி மனம் அதை அறியும். பிரபஞ்ச வாழ்வில் உள்ள பிரபஞ்ச சக்தியை அடி மனம் அறியும். பிரபஞ்ச சக்தி பிரபஞ்ச ஜடத்தில் ரூபம் பெறுவது அடி மன உடலுணர்வுக்குண்டு. அது மேல் மனத்தை அடி மனத்திலிருந்து பிரிக்கும் தடித்த சுவர். அது மனம், வாழ்வு, உடலில் உள்ளது. இயற்கை இச்சுவர்களை ஊடுருவும் கடமை பெற்றது. குறையாகவே ஊடுருவ முடியும். ஊடுருவும் திறமை பெரியது. ஆனால் சுவர்களின் பருமன் அதிகம் என்பதால் ஊடுருவும் முயற்சி தெளிவற்ற குழப்பமானதாக இருக்கிறது. பகவான் அதைத் தெளிவான குழப்பமான கருவி என்கிறார். இது செய்தியை அறிவிக்கும் லோகம். பிரிவினைக்குட்பட்ட நுட்பமான லோகம். இரண்டு தொழில்களும் ஒரே சமயத்தில் நடக்கின்றன. பிரபஞ்ச ஆத்மா தன் வாழ்வில்

ஆனந்தப்படுகிறது. மற்ற ஆத்மாக்கள் வாழ்விலும் அது ஆனந்தத்தை உணர்கிறது. இப்பல ஆத்மாக்கள் பிரபஞ்ச ஆத்மாவாகும். அடி மன ஆத்மா பிரபஞ்ச ஆனந்தத்தை உணரவல்லது. மனம், வாழ்வு, உடல் வளர இயற்கை உழைக்கிறது. எங்கும் போல் ஆத்மாக்கள் ஜீவனின் பகுதிகளைப் பிரதிபலிக்கின்றன. மேல் மன ஆத்மா பிரபஞ்ச ஆனந்தத்தை அறிவதினின்று அகந்தையால் தடுக்கப்படுகிறது. அவை தடித்த சுவர்கள். அவை ஊடுருவும் சுவர்களின் வாயில். இச்சுவர்கள் பெரிதும் ஊடுருவ உதவுகின்றன. சுவர் வழியாகப் போனால் பெரும் பிரபஞ்ச ஆனந்தத்தைச் சுருக்கும் தன்மை அவற்றிற்குண்டு. ஆனந்தம் சிதறி முகமூடியணிந்து எதிரானதாகிறது.

மேல் மனத்தில் உண்மையான வாழ்வில்லை. ஆத்மீக வாழ்வு உண்மையான வாழ்வு. உண்மை சிதறி சைத்திய புருஷனானது நாம் பெற்றது. பொருளின் ஸ்பர்சம் அவற்றிற்கு எதிரானதாக வருகிறது. மனிதனால் தன் உண்மையான ஆத்மாவைக் காண முடியாது. அது துர்அதிர்ஷ்டம், இருளின் குறை. உண்மையான ஆத்மாவில் மனிதன் உள்ளுணர்வில் வாழ்கிறான். புறத்தில் உலகை அவன் ஏற்றுத் தழுவும் பொழுது ஆத்ம ஸ்பர்சத்தின் உண்மை தவறுகிறது. இதுவே அவன் தரித்திரத்தின் அடிப்படை. சத்தியத்தின் மூலத்தை நாடும் மனிதன் மேலெழுந்து ஸ்பர்சத்தையும் தோற்றத்தையும் பெறுகிறான். அவை சுபாவத்தின் முரண்பாடானவை. ஜீவனின் மூலம், ஜீவியத்தின் மூலம், பவரின் மூலம், ஆனந்த சாரம் ஆகியவை மூலம் மனிதன் தேடுவது ஒரு பிரபஞ்ச ஜீவன், பவர், தெளிந்த வாழ்வு, ஆனந்தமுண்டு. அதைக் காண மனிதன் அவற்றின் மூலத்தை அறிய வேண்டும். கோடிக்கணக்கான தோற்றமும், ஸ்பர்சமும் உண்டு. அவற்றிற்கு ஐக்கியமும், சத்திய சுமுகமும் உண்டு. அவ்வைக்கியத்தில் இம்முரண்பாடுகள் அனைத்தும் சுமுகமாகும். உலகத்தின் ஆத்மாவான பிரம்மமும், மனிதனுடைய ஆத்மாவான பிரம்மமும் ஒன்றே. இந்த பிரம்மத்தின் பிரதிநிதியே அவனுடைய நிஜமான ஆத்மா. தன் உண்மையான பிரம்ம ஆத்மாவை தன் ஆத்மா மூலம் அவன் காணலாம். ஐக்கியமும், சுமுகமும் வந்தபின் அவை



சத்தியத்தின் அம்சங்களாதலால் இது நடக்கும். அவனது அகந்தையின் அறியாமை, மனம், எண்ணம், உணர்ச்சி, உடலுணர்வு தடையாக உள்ளன. உலகம் தழுவிய பொழுது மனப்பூர்வமாக தைரியமாக அவை தழுவலை ஏற்றுக் கொள்வதில்லை, எச்சரிக்கையாக, ஸ்பர்சத்தினின்று விலகி சுருங்குகின்றன. ஆர்வமாக வருவதும், அதிருப்தியாக சுளிப்பதும் உண்டு. பயமும் கோபமும் அவற்றினுடைய பதில். விருப்பமற்ற தீண்டுதலினின்று விலகி சுருங்குகின்றன. சந்தோஷமான தழுவலால் திருப்தியடைகின்றன. சௌகரியம் அல்லது எச்சரிக்கை, திருப்தி அல்லது அதிருப்தி அவற்றின் பதில். சந்தோஷம், வலி, பாராமுகம் உண்டு. ஆசையின் மூன்று அறிவு நிலைகள் அவை. வாழ்வைத் தவறாகப் புரிந்து கொள்வது ரஸத்தின் விளக்கம். அது பொருள்களில் காணும் ஆனந்தத்தைத் தவறாகப் புரிந்து கொள்வது. தூய்மையான மூலமான ஜீவன், அதன் சந்தோஷம் அகந்தை வாழ்வில் அப்படி மாறுகின்றன.

இதற்கு முன் ஜீவனுடைய ஆனந்தத்தை உலகுடன் இணைத்துப் பார்த்தோம். வலி, சந்தோஷம் என்ற வரைமுறைகள் உண்டு எனக் கண்டோம். நாம் கண்ட வரைமுறைகள் செல்லாதவை. இந்த வரைமுறைகட்கு செல்லும் உரிமையில்லை. இவை மனத்தைப் பொருத்தவரை முறை. மனம் என்பது உணரும் ஜீவியம். அது மட்டும் நிர்ணயிக்கிறது. நம் உணர்ச்சியின் தீவிரம் நம் இஷ்டப்படி மாறும் என அறிந்தோம். அவற்றை உயர்த்தலாம், தாழ்த்தலாம், அழிக்கலாம். வலி சந்தோஷத்திற்குரிய பெரிய இரகஸ்யம். அவை ஆதியில் ஒன்றே. ஒன்று அடுத்ததாக மாறும். வலியா, சந்தோஷமா என நிர்ணயிப்பது நம் உணர்ச்சி. நம் இதய உணர்வும் அதைச் செய்யும். மேல் மனத்து ஆசை கவனிக்காவிட்டால் அது பாராமுகமாகும். மேல் மனம் என்பது மனம், உணர்ச்சி, ஆசையாலானது. அவை ரஸத்திற்காக ஆர்வமாக இருக்கின்றன. பெற முடியாது, பதிலிறுக்க முடியாது என்பதனாலிருக்கலாம். அல்லது பதிலிறுக்க மறுக்கலாம். மனம் நடுநிலை வகிக்கக் கட்டாயப்படுத்தலாம். மேல் மனம் ஏற்க மறுத்தால் பதில் நடுநிலைமையாகும். இவற்றிற்கெல்லாம் ஏதாவது

நடந்தபடியிருக்கிறது. சில சமயங்களில் அது தீர்க்கமான மறுப்பாகும். அல்லது வேண்டாம் என தயாராகக் கூறும் மன நிலை அல்லது இயலாமை. அடி மனத்தில் செயல்படாததை மேல் மனம் ஏற்காது.

இப்பொழுது நாம் மனத்தால் கவனிக்க முடியும். சில சோதனைகள் உண்டு. அவை அடி மன உண்மையை வலியுறுத்தும். மேல் மனம் சில விஷயங்களைக் காணும், மற்றதைப் புறக்கணிக்கும். ஆனால் அடி மனம் ஒன்று விடாமல் கவனிக்கும். இது அடி மன உண்மை. அடி மனத்திற்கு ஆத்மா உண்டு. அது ரஸத்தை அறியும். இந்த ஸ்பர்சங்களில் ரஸத்தை அறிவது முக்கியம். மேல் மன ஆசையின் ஆத்மா பிடிக்கவில்லையென பலவற்றைப் புறக்கணிக்கும். அது மறுக்கும், விலக்கும், உதாசீனப்படுத்தும். எதை உதாசீனப்படுத்துகிறதோ அதை நடுநிலையில் ஏற்கும். மேல் மனத்தின் பின் செல்லாமல் ஆத்ம ஞானம் பெற முடியாது. மேல் மனம் அதற்கு வேண்டியதை மட்டும் ஏற்கும். அது புற அனுபவம். மேல் மனம் குறையுடைய சோதனைக் களம். அவசரப்பட்டு, திறமையற்ற துண்டாகச் சிறியதைத் தனக்கேற்றபடி புரிந்து கொள்ளும். உண்மையில் நான் சிறிதல்ல, பெரிது, மிகப் பெரியது. நாம் மேல் மனத்தின் பின்னால் போக வேண்டும். பாதாளத்தைத் தொட வேண்டும், பரமாத்மாவை அடைய வேண்டும். அவற்றிற்கு மேல் மனத்தின் தொடர்பு என்ன என அறிய வேண்டும். நம் வாழ்வு இந்த மூன்றிடையே வாசம் செய்யும். வாழ்வின் முழுமை இம்மூன்றில் அடங்கியுள்ளது. நம்முள் ஆத்மா உள்ளது, அதன் ஆதியான பிரம்மமுள்ளது. பரமாத்மா என நாம் கூறுவது இவ்விரண்டுடன் ஒன்றியது. நம் மேல் மன நிகழ்ச்சிகள் பரமாத்மாவைக் கட்டுப்படுத்தாது. மேல் மனத் தோற்றத்தின் பல வண்ணங்களாலானது. இவற்றின் சத்தியம் பரமாத்மாவில் உள்ளது. இவற்றின் ஆனந்தமும் அங்குள்ளது. அங்கு அவை அளவு கடந்த அபரிமிதமானவை. பாதாளம் உண்டு. நாம் அதை அடி மனத்தின் முடியாக அறிகிறோம். அது ஜோதியின் பொலிவுடையது. பாதாளம் பரமாத்மாவாகாது. அனுபவம் பெறும் திறனுடைய கருவி அங்கில்லை.



அது ஆத்மாவுடனோ, பிரம்மத்துடனோ இணைந்ததில்லை. உலக அனுபவத்தின் மூலம் பாதாளம் உலக ஆத்மாவை அடைகிறது. பாதாளத்திற்கு ஆத்மா உண்டு. அது உள்ளே ரஸத்தைத் தெளிவாக அறியும். எல்லா ஸ்பர்சமும் அதற்கு ஒன்று போல் ருசிக்கும்.

அடி மனமும், மேல் மனம் ஏற்கும் தரங்களையும் பண்புகளையும் ஏற்கும். அடி மனம் அதற்குரிய ஸ்பர்சத்தை ஏற்கும். அவை சந்தோஷம், வலி, பாராமுகம். அடி மனம் அவற்றிலிருந்து ஒரே உணர்வைப் பெறும். மேல் மனத்தில் சில ஸ்பர்சத்தை விரும்புகிறோம். மற்றதை விலக்குகிறோம். நம் உண்மையான ஆத்மா அடியிலிருந்து எல்லா ஸ்பர்சத்தையும் சந்தோஷமாக அனுபவிக்கின்றது. எல்லா அனுபவமும் சந்தோஷம் தரும். அவற்றால் வலிமை பெறும். ஞானமும் சந்தோஷமும் பெறும். அவற்றால் அது சேகரம் செய்த இனிய அனுபவம் உபரியாகிறது. அதுவே நம் உண்மையான ஆத்மா. மேல் மன ஆசையின் ஆத்மா வலியிலிருந்து விலகிச் சுருங்கலாம். ஆனால் உண்மையான ஆத்மா மேல் மனத்தை வலியை நாட வற்புறுத்தும். மேல் மனம் ஒரு அனுபவத்தை விரும்பி நாடலாம். உண்மையான ஆத்மா அதை மறுக்கும்படி மேல் மனத்தை வற்புறுத்தும். உண்மையான ஆத்மாவுக்கு மேல் மன நாட்டத்தை மாற்றவும், தலைகீழே திருப்பும் திறனும் உண்டு. பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவற்றை 'பாராமுகமாக சமன் செய்தல்' என்கிறார். அல்லது 'பாராமுகமான சந்தோஷம்' எனலாம். அதற்கு வாழ்வின் பல்வேறு இன்பங்கள் எனப் பெயர். பிரபஞ்ச உணர்ச்சியே இதற்குக் காரணம். எல்லா அனுபவங்களாலும் வளரும் முறையிது. இது இயற்கையின் வழி. தாவரமும், கல்லும் அசைவதில்லை. அவற்றின் வாழ்வு வழக்கமானது. அவற்றின் வாழ்வு மேலே தம்மை அறியாதது. இரகஸ்யமான ஆத்மாவுக்கு அவற்றின் மேல் மனத்தில் வழக்கமான உணர்வை கடக்கும் கருவியில்லை. குறுகிய, இறுகிய, மாறாத பள்ளமான பாதையில் பிறந்தவை அவை. மேல் மனத்தில் மட்டும் வாழ்ந்தால் நாம் கல்லைப் போல், மரம் போலிருப்போம். தன்னிஷ்டத்திற்கு விட்டுவிட்டால் ஆசையின் ஆத்மா சென்ற வழியிலேயே மீண்டும்

மீண்டும் செல்லும். முடிவு வரையும் செல்லும். அடி மனம் ஜீவனற்ற வழக்கத்தை மாற்றும்.

பழைய தத்துவங்களில் வலியும் சந்தோஷமும் இணைபிரியாதவை. அதே போல் பொய்யும் அறிவின் உண்மைகளும் இணைபிரியாதவை. பவரும் பலஹீனமும்; பிறப்பும் இறப்பும் அது போன்ற இரட்டைகள். அதனால் வலியிலிருந்து தப்ப ஒரே வழியுண்டு. வலி, சந்தோஷம் இரண்டையும் முழுவதும் விலக்குவதே வழி. மனிதனை உலகத்தின் ஆத்மாவான பிரம்மம் தூண்டுகிறது. மனிதன் அதை வெற்று பாராமுகத்தால் வரவேற்க வேண்டும். ஆனால் சூட்சுமமான மனோதத்துவ ஞானம் பெறலாம். பாராமுகம் மேலெழுந்து ஞானம் கூறுவது என அது உணர்த்தும். இப்பிரச்சினையைச் சந்திக்க உள்ள சந்தர்ப்பங்கள் ஏராளம். இக்கண்ணோட்டம் - பாராமுகம் - குறுகியது. உண்மையான ஆத்மாவை மேல் மனத்திற்குக் கொண்டு வரலாம். வலியும், சந்தோஷமும் அகந்தை ஏற்படுத்திய வரையறையான அம்சங்கள். உண்மையான ஆத்மா அகந்தையை விலக்கிச் செயல்படலாம். அது ஆனந்த உணர்வை உட்கொண்ட எல்லா உணர்வுகளையும் தன்னுட்கொண்டது. அதன் ஆனந்தம் குறிப்பானதும் பொதுவானதுமாகும். அதாவது வலி எழுந்தவுடன் உண்மையான ஆத்மாவால் அதனின்று பொதுவான ஆனந்தத்தைக் காணமுடியும். இயற்கை எழிலைக் காண்பவனால் இதைச் செய்ய முடியும். நமக்கு மட்டமான பயங்கரமான வெறுக்கத்தக்க காட்டுமிராண்டியான தாழ்ந்த காட்சிகளுண்டு. இயற்கை எழிலை காண்பவனுக்கு அதில் சந்தோஷம், அன்பு, அழகு தெரிகிறது. அவன் எதையும் மறுப்பதில்லை, விலக்குவதில்லை. எல்லா உணர்வையும் ஏற்று அவற்றுள் சந்தோஷம் காண்கிறான். கவிஞனும், கலைஞனும் அதைக் காண முடிகிறது. பிரபஞ்ச ரூபத்தின் ரஸத்தை அவர்களால் காண முடிகிறது. அவர்கட்கு அது அழகுணர்ச்சி. கலைஞனுக்கு அழகு ரூபத்தின் எல்லைக் கோடாகத் தெரிகிறது. அது உள்ளுணர்வில் எழுவது. அது பவர். எளிய மனிதன் அதனின்று விலகிப் போகிறான். சந்தோஷம் மட்டும் அவனறிவது. ஞானியும்



அதைச் செய்கிறான். அழகை அனுபவிப்பவனும் அதை அறிய முடிகிறது. இறைவனை அன்பால் அறிபவன் எங்குப் பார்த்தாலும் அழகைக் காண்கிறான். ஆன்மீகவாதி, அறிஞன், உணர்ச்சியுள்ளவன், அழகை உணர்பவன் அனைவரும் இவற்றைக் காண்கின்றனர். ஒவ்வொருவரும் அவரவர் பாணியில் செய்கின்றனர். அழகு, அன்பு, சந்தோஷம் அவர்கட்குக் குறி என்பதால் அவர்கள் இறைவனைத் தேடுவதாக நாம் அறிவோம். அகந்தையும் ஆசையை நாடும் ஆத்மாவும் அனைத்தையும் மாற்றி விடுகின்றன. அகந்தையின் வலிமை, ஆசையின் ஆத்மாவின் பலஹீனம், இவற்றை எதிராக மாற்றுகின்றன. எதிரான அனுபவம் எழுகிறது. அது உடலைச் சந்தோஷப்படுத்தி, உணர்வுக்குச் சந்தோஷம் கொடுத்து, எதிரான துன்பத்தை அழைக்கிறது. அதனால் வலியும் சந்தோஷமும் எழும். அவை எழுந்தபின் இறைவனுக்குரிய முழு தத்துவம் எடுபடாது. அது முடியாது. அசுரத்தனமானது, வெறுக்கத்தக்கது. பொதுவான உணர்வைக் கலையும் விஞ்ஞானமும் அறியும். அகந்தை அதை அறியாது. விஞ்ஞானம் மட்டும் பொதுவான உணர்வை அறியவில்லை. சில அரைகுறையான ஆன்மீகவாதிகளும் அதை அறிவர். சில சமயங்களில் நம் புற உணர்வு சில ஆசைகள், பண்புகளில் அதிக ஆர்வம் காட்டும். பொதுவான உணர்வு தொந்தரவு செய்யாவிட்டால், நாம் அதை அனுமதிப்போம். இது உயர்ந்த சுதந்திரமான நேரம். அதற்கென தேவைப்படும் அளவோடுள்ள சமத்துவம் தேவை. மற்ற இடங்களில் அகந்தையின் அடிப்படை தொடரும். முன்னேற்றம் ஒரு குறிப்பிட்ட ஜீவியத்திற்குரியது. தாழ்ந்த இடங்களில் நம் அடிப்படை முழுவதுமாக மாற வேண்டும். அகந்தைக்கு அது முடியாது. ஆசையின் ஆத்மா பொது உணர்வை அனுமதிப்பதில்லை.

நம் உண்மையான ஆத்மா நம்முள் இரகஸ்யமாகவுள்ளது. நாம் அதை அடி மனம் என்கிறோம். அது கருத்தைத் தவறாகப் புரிந்து கொள்ள உதவாது. அடி மனம் என்றால் மேல் மனத்திற்கு அடியில் எனப் பொருளாகும். ஆத்மா அங்கில்லை. மனம், வாழ்வு, உடல் அஞ்ஞானத்தாலானவை. அவற்றின் பின் தடித்த

திரையொன்றுள்ளது. ஆழ்ந்த இதயக் கோவில் அத்திரையின் பின் அமைந்துள்ளது. உண்மையான ஆத்மா அங்குள்ளது, மனத்தில் அடியிலில்லை. உண்மையில் ஆத்மா அடி மனத்திற்குரியதல்ல. இத்திரைக்குப் பின் அமைந்துள்ளது. இதுவே திரையிடப்பட்ட சைத்திய புருஷன். இது இறைவனுடைய தழல். நம்முள் என்றும் எரிவது. இதை அணைக்க முடியாது. நம்முள் பிரம்மமான ஆத்மா தன்னையறியாதது, இருண்டுள்ளது. அது நம் மேல் மன இயற்கையை இருளாக்குகிறது. இந்த இருளும், குருட்டுத்தனமும் சைத்தியத் தழலை உள்ளே அணைக்க முடியாது. சைத்தியம் இறைவனில் பிறந்தது. அறியாமையுள் ஜோதியாய் உறைவது. அறியாமையுள் தழல் ஞானமாகும் வரை வளரும். மறைந்துள்ள சாட்சி, மறைந்துள்ள வழிகாட்டி, நம்மைக் கட்டுப்படுத்துபவன் அவன், அதுவே சாக்ரடீஸ் கூறிய கடவுள். உள்ளுறை ஜோதி. அசரீரி, இரகஸ்யமான ரிஷி. பிறவியிலிருந்து அடுத்த பிறவி வரை வருவது அது. அழியாதது. மரணத்தாலும் அழிவாலும் ஊழலாலும் தீண்டப்படாதது. இறைவனின் பொறி தன்னை இழக்க முடியாதது. ஆத்மன் எனவும் சிருஷ்டியில் பிறக்காத பிரம்மம் எனவும் நாம் கூறுவதில்லை இது. நாம் கூறும் பிரம்மம் மனித வாழ்வின் தலைவன். பிரபஞ்சத்தையும், அதைக் கடந்த பிரம்மத்தையும் நம்முள் அறியும் பிரம்மம் அது. இருப்பினும் அது இயற்கையில் பிரம்மத்தின் பிரதிநிதி. அதுவே மனித ஆத்மா சைத்திய புருஷன் என்பது. அது மனம், வாழ்வு, உடலை ஆதரிக்கிறது. மனம், வாழ்வு சூட்சும உடலின் பின்னாலுள்ளது. அது கவனிக்கும். வளர்ச்சியையும், அனுபவத்தையும் கவனித்து அதன் பலன் பெறும். அவை மனிதனுடைய தனி சக்தி. அது ஜீவனுடைய ஜீவன். அதன் உண்மை அம்சம் திரையிடப்பட்டுள்ளது. அதன் மேலெழுந்த அம்சங்கள் இணைந்து ஒரு அந்தஸ்து தருகிறது. தற்காலிகமான அம்சங்களை வெளியிடுகின்றது. அவை நம் புற மனித அம்சம். நாம் அதை நாம் என அறிவோம். இது ஆழ்ந்து உள்ளேயுள்ளது. இதுவே நம்முள் சைத்திய புருஷனாக உருவாகிறது. அது சைத்திய புருஷனாக வெளிப்படுத்தப்படுகிறது. அது பிறவிகளில் தொடர்ந்து மாறி,



வளர்ந்து, பிறவிக்குப் பிறவி வளர்கிறது. ஒரு பிறவியினின்று அடுத்த பிறவிக்குச் செல்லும் யாத்ரீகன் இவன். நம் இயற்கையின் அம்சங்கள் அது புறத்தில் அணிந்த ஆடை. அது பல்வேறாக உள்ளது, மாறுவது. சைத்திய புருஷன் மனம், வாழ்வு, உடல் வழி மறைமுகமான, பகுதியான, மறைந்துள்ள செல்வாக்கே பெற்றது. இப்பகுதிகளைச் சைத்திய புருஷன் தன்னை வெளிப்படுத்தும் கருவியாக வளர்க்க முயல்கிறது. அவற்றின் பரிணாமத்தால் அது நீண்ட காலமாக மறைக்கப்பட்டுள்ளது. அறியாமையான மனிதனை தெய்வீக ஜீவியத்தின் ஜோதியை நோக்கி வழி நடத்தும் இலட்சியம் சைத்திய புருஷனுடையது. அறியாமையில் பெறும் எல்லா அனுபவ சாரங்களையும் அது சேகரம் செய்கிறது. அவற்றிலிருந்து இயற்கையின் ஆத்மா வளரும் கருவை உருவாக்குகிறது. மீதியை கருவிகளின் எதிர்கால வளர்ச்சிக்காக விட்டு விடுகிறது. ஜோதிமயமான இறைவனாவதே இலக்கு. அதுவரை சைத்திய புருஷன் இக்கருவிகளைப் பயன்படுத்துகிறான். இதுவே நம்முள் உள்ள இரகஸ்ய சைத்திய புருஷன். மனசாட்சி என நாம் அறிவதைக் கடந்து ஆழத்தில் உள்ள உண்மையான மனசாட்சி இதுவே. நாம் மனசாட்சி என்பது நியாயவாதி ஊரையொட்டி மனசாட்சி என உருவாக்கியது. சுமுகம், அன்பு, அழகு, சத்தியம், நியாயத்தை இது நாடுகிறது. இவை இயற்கையில் இறைவன் வெளிப்படும் வகை. அடிப்படையான விஷயங்கள் நம்முள் உறுதிப்படும் வரை இம்மனசாட்சி தொடரும். சாது, சாமியார், மகான், ரிஷி என நம்முள் எழுவது இதுவே. இது முழு வளர்ச்சியடைந்தவுடன் பிரம்மத்தையும் இறைவனையும் நாடும். நம்மை உயர்ந்த ஆனந்தம், அன்பு, அழகு, நல்லது, சத்தியத்திடம் அழைத்துச் செல்கிறது. இவை இறைவன் எட்டும் அகன்று உயர்ந்த சிகரங்கள். நம்முள் பிரபஞ்ச ஒருமை, ஆன்மீக அனுதாபத்தை இவை ஸ்பர்சிக்க உதவும். மாறாகச் சைத்திய புருஷன் திறனிலும், சுபாவத்திலும் வலுவற்றவனாக இருக்கலாம். மனம் வேகமாக ஒளிமயமானதாக இருக்கலாம். இதயமும், நரம்பு உணர்ச்சியும் கடினமாக, வலுவாக ஆட்சி செய்யலாம். வாழ்வின் சக்தி ஆட்சி

செய்து வெற்றிகரமாகச் செயல்படலாம். அல்லது உடல் வாழ்வு அதிர்ஷ்டமாகச் செறிந்து பார்வைக்கு வெற்றி பெறும் தலைவனாக இருக்கலாம். புறத்தில் ஆசையின் ஆன்மா வேஷதாரியான சைத்திய புருஷன். மேற்கண்ட வழிகளில் இது ஆள்கிறது. நாம் இதைத் தவறாக உண்மையான ஆத்மாவுக்கு அம்சமாகக் கொள்கிறோம். நமக்கு இது ஆன்மீக அனுபவம் என்ற பொக்கிஷம். இதன் சொல்லையும், ஆர்வத்தையும் நம் உண்மையான ஆத்மாவின் ஆர்வம் என நாம் தவறாகக் கொள்கிறோம். அதே போல் அதன் கருத்து, இலட்சியம், ஆசை, ஆர்வம் ஆகியவற்றை நாம் தவறாக அறிகிறோம். ஆன்மீக அனுபவத்தை நோக்கி உயர்வது நம் இலட்சியம். நம் வாழ்வு உண்மையான ஆத்மாவின் பிம்பமாக வடிக்கப்பட நாம் விரும்புகிறோம். ஆத்மாவின் பிரதிபிம்பம் சரியான, முறையான, அழகானவை. இவ்வகையில் முடிவில் முழு இயற்கையும் வாழ்வின் உண்மை இலட்சியத்தை நாடும். இதற்கு இரகஸ்யமான சைத்திய புருஷன் வெளிவர வேண்டும். அது ஆசையை விலக்கி அதனிடத்தில் அமர வேண்டும். முழுமையாக நேராக ஆட்சி செலுத்த வேண்டும். பகுதியாக மனம், வாழ்வு, உடலின் பின்னின்று புற வாழ்வை நடத்துவது போதாது. அதுவே உச்சகட்ட வெற்றி.

வெளிவரும் சைத்திய புருஷனே எல்லாம். அதனால் பூவுலகில் வானுலக வாழ்வை ஏற்படுத்தலாம் என நாம் நினைக்கலாம். நாம் சைத்திய புருஷனை முன்னுக்குக் கொண்டு வருவதுடன் அவன் நம் வாழ்வை ஆளும் உரிமை தர வேண்டும். நாம் எதிர்பார்க்கும் எல்லா நிறைவுகளும் கிடைக்காமற் போகலாம். இதெல்லாம் நடப்பதால் சத்திய ஜீவியமே தேவையில்லையெனக் கருதலாம். தெய்வீக அந்தஸ்தும் தெய்வீகச் சிறப்பும் நம் இலக்கு. இதைச் சாதிக்க சத்திய ஜீவிய சூழல் தேவையென நாம் அறிவோம். அது குறிக்கிட்டுச் செயல்பட்டால் மட்டுமே இது நடக்கும். அத்துடன் சத்திய ஜீவியத் தத்துவம் இந்த இலட்சியத்தைப் பூர்த்தி செய்ய அவசியம் எனவும் நாம் அறிவோம். ஆனால் சைத்திய புருஷனே அனைத்தையும் சாதிக்க முடியும் எனத் தோன்றுகிறது. நம் முழு வாழ்வு திருவுருமாறத் தேவைப்பட்ட



திருவுருமாற்றங்களில் சைத்திய புருஷ திருவுருமாற்றம் அவசியம் என அறிகிறோம். சைத்தியத் திருவுருமாற்றம் மட்டும் போதாது. முதலாவதாக சைத்திய புருஷன் இயற்கையின் ஆத்மா. அது நம் தெய்வீக ஜீவனின் கட்டங்களை நமக்குத் திறந்து காட்டும். தெய்வீக ஜீவனின் ஜோதியையும், பவரையும் பெற்றுப் பிரதிபலிக்கும் திறனுடையது சைத்திய புருஷன். ஆனால் நம் முழு திருவுருமாற்றம் நடைபெற நாம் பிரபஞ்சம் முழுவதும் பரவ வேண்டும். மேலும் அதைக் கடந்து அடுத்த கட்டத்தையும் - பிரம்மத்தையும் - அடைய வேண்டும். எனவே மேலும் ஆன்மீகத் திருவுருமாற்றமும் தேவை. ஆனால் சைத்திய புருஷன் சத்தியம் உருவாகும் நிலையை ஏற்படுத்த வல்லது. அத்துடன் அது திருப்திபடலாம். அது அழகு, நல்லதாக இருக்கலாம். சைத்திய புருஷன் அங்கேயே தங்கிவிட முடிவு செய்யலாம். அடுத்த கட்டமும் போகலாம். அங்கு அது உலகத்தின் ஆத்மாவுக்கு உட்படலாம். இது செயலற்ற அடிமைத்தனம். இவ்வழி சைத்திய புருஷன் பிரபஞ்ச வாழ்வைப் பிரதிபலிக்கும். மேலும் அது பிரபஞ்ச ஜோதி, பவர், ஜீவியம், ஆனந்தத்தைப் பிரதிபலிக்கும். இதனால் பிரதிபலிப்பதை முழுவதுமாகப் பெற்றதாகாது. சைத்திய புருஷன் பிரபஞ்ச ஜீவியத்துடன் இணையக்கூடியது. அது புல்லரிப்பது. புல்லரிக்கும் நேரம் ஐக்கியம் பூர்த்தியாகியிருக்கும். ஞானத்திலும் உணர்விலும் ஐக்கியம் ஏற்படுகிறது. உடலில் உணர்வு ரசிக்கும் நிலையும் ஏற்படும். இருந்தாலும் இவ்வளவும் செயலற்ற நிலையில் பெறுவதாகவே அமையும். உலகில் செயல்பட முழு அதிகாரம் தராது இது. பிரபஞ்சத்தின் பின்னாலுள்ள அசையாத ஆத்மாவுடன் அது இணையலாம். இங்கும் அது உலக சலனத்தினின்று பிரிந்து நிற்கலாம். அப்படியானால் அது தன் தனித்தன்மையை ஆதியிலேயே இழந்துவிடும். அந்த ஆதிக்குத் திரும்பலாம். அதனுள் முடிவான இலட்சியம் இயற்கையைத் தெய்வீக சித்தி பெறச் செய்வதேயாகும். இறைவன் பிரம்மமானதிலிருந்து சைத்திய புருஷன் பிறந்தான். அது இயற்கையை விட்டு மீண்டும் மௌனமான இறைவனையே அடையலாம். மௌனமான பிரம்மத்தை அடையலாம். அது உச்சகட்ட

ஆன்மீகச் சலனமற்ற நிலை. சைத்திய புருஷன் இறைவனின் சாஸ்வதமான பகுதி. இது இறைவனின் அம்சம். இறைவனது சட்டம் அனந்தமான சட்டம். அதன்படி பகுதியை முழுமையிலிருந்து பிரிக்க முடியாது எனக் கூறும். உண்மையில் பகுதியே முழுமை. புறத்தோற்றத்தில் பகுதி முழுமையில்லை. புறத்தோற்றத்தில் பிரிந்த நிலையில் அது பெறும் சுய அனுபவம். அது உண்மையை அறிந்து அதனுள் மூழ்கலாம். தன் தனித்தன்மையை இழந்து அது கரைந்ததாகத் தெரியலாம். அஞ்ஞானப் பெருவெள்ள இயற்கையில் சைத்திய புருஷன் சிறு கரு. உபநிஷதம் அது கட்டை விரல் பரிமாணம் என்று கூறுகிறது. ஆன்மீக அனுபவத்தால் அது பெருகும். முழு உலகையும் அதன் மனம், நெஞ்சத்தையும் அது தழுவலாம், தழுவி ஒருமையை உணரலாம். அல்லது காலத்திற்கு உடனுறைபவனை அறியலாம். அவன் முன்னிலையில் நிரந்தரமாக வாழ முடிவு செய்யலாம். அது அழியாத ஐக்கியமான ஒருமையாகலாம். காந்தனும் காதலுமான சாஸ்வதமான உறவு அது. எல்லா ஆன்மீக அனுபவங்களிலும் இதுவே அழகு நிறைந்து ஆத்ம நிறைவு தருவது. இவையெல்லாம் ஆன்மீக சுய அனுபவத்தின் அற்புத முடிவுகளாகும். ஆனால் இதுவே முடிவல்ல, மேலும் பெருக முடியாத முடிந்த கட்டம் இதுவல்ல. மேலும் சாதிக்க முடியும்.

மனத்திற்கும் சத்திய ஜீவியத்திற்கும் இடையேயுள்ள நிலைகளை பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஆன்மீக மனநிலை என அழைக்கிறார். மேற்சொன்ன அனுபவம் அந்த ஆன்மீக மனநிலைக்குரியது. மனம் தன் எல்லையைக் கடந்தால் அது எழுப்பும் அலைகள் சலனமாக செயல்படும். மனத்தைக் கடந்தால் மகிழ்ச்சி பொங்கும். ஆன்மீக மனநிலைகள் அவை எனினும், அவை அடிப்படையில் மனமேயாகும். அவை ஆன்மாவின் அற்புதங்கள். ஆனால் சத்திய ஜீவியமில்லை. மனத்தின் சுபாவம் பிரிவினை. நாம் நம் மனத்தை அறிவோம். அதன் உச்சகட்டம் தெய்வீக மனம். அங்கும் மனம் பிரிவினையில் ஈடுபடுகிறது. அனந்த ஜீவனின் அம்சங்களை அது எடுத்துக் கொள்கிறது. அதன் ஒவ்வொரு அம்சத்தையும் தனியான



முழுமையாகக் கருதுகிறது. ஒரு அம்சத்தில் மனம் முழுமையை உணர்கிறது. அனந்தனின் இரு அம்சங்களை எடுத்து அவற்றை எதிரெதிரானதாக்குகிறது. அது மட்டுமல்ல. அது போன்ற பல நிலைகளை அது தொடராக ஏற்படுத்துகிறது. மனம் இறைவனின் மௌனத்தை அவன் செயலுக்கு எதிரானதாகச் செய்கிறது. அசையாத பிரம்மத்தை எடுத்துச் செயல்படும் பிரம்மத்திற்கு எதிரானதாகக் கருதுகிறது. குணங்களற்ற அசையாத பிரம்மத்தை மனம் பிரித்து குணங்களாலான செயல்படும் பிரம்மத்திற்கு எதிராக அமைக்கின்றது.

வாழ்வின் ஈஸ்வரன் ஜீவன், ஜீவியம் என்பது அதே போன்ற எதிரெதிரான இரட்டைகள். இறைவன் என்ற மனிதனைப் பொதுவான தூய்மையான வாழ்வுக்கு எதிராக நிறுத்துகிறது. மனம் ஒன்றிலிருந்து வெட்டிப் பார்த்து மற்றதில் ஆழ்ந்து கலக்கவல்லது. அது போன்ற ஒவ்வொரு அம்சமும் மனத்திற்கு வாழ்வின் முழுமையான ஒரே அம்சமாகும். மனிதனைத் தனியாகவும் அவன் பொதுத்தன்மையைத் தனியாக வேறாகவும் பிரித்துக் காட்டவல்லது மனம். காந்தனை அன்பின் ஒரே வெளிப்பாடாகவும் அன்பை காந்தனின் ஒரே வெளிப்பாடாகவும் மனம் காட்டவல்லது. ஜீவன்களை மனம் பொதுவான வாழ்வின் குறிப்பான சக்திகளாகக் காணவல்லது. அல்லது பொதுவான வாழ்வு நிலையை அனந்தனின், ஒரே ஜீவனின் ஒரே அம்சமாகக் காட்டக்கூடியது மனம். ஆன்மீக இலட்சியத்தில் உயர்ந்த இலட்சியத்தை நோக்கிச் செல்லும் பாதை இது போன்ற பிரிந்த நிலைகளைப் பின்பற்றும். ஆன்மீக மன நிலைகளின் செயல்கட்குப் பின் உயர்ந்த அனுபவமான சத்திய ஜீவிய அனுபவம் உண்டு. அங்கு இந்த எதிர்ப்புகள் மறையும். பகுதிகளான அம்சங்களை விட்டு ஒழித்த நிலையது. சாஸ்வதமான அனந்தமான ஜீவன் உயர்ந்த நிலையில் செறிந்த முழுமையுடையது. அது அனைத்தும் இணைந்த சித்தி. இதை நாம் நம் இலட்சியமாகக் கொண்டோம். சத்திய ஜீவியத்திற்கு உயர்ந்து அது நம் சுபாவத்துள் வந்து நம் வாழ்வு பெறும் முழுமை அது. சத்திய ஜீவிய திருவுருமாற்றம்

ஆன்மீக மாற்றத்துள் நுழைந்து தன்னைப் பூர்த்தி செய்து கொள்கிறது. சத்திய ஜீவிய திருவுருமாற்றத்தால் அது இணைக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, தான் உள்ள நிலையைக் கடக்க வேண்டும். நாம் உயரும் முயற்சியின் சிகரத்தை அது எட்டும். சிருஷ்டிக்கப்பட்ட ஜீவனுக்குப் பிரிந்த எதிரெதிரான மற்ற அம்சங்களுண்டு. இவ்விரு எதிரான அம்சங்களிடையே சிறப்பான சுமுகத்தை நிலைநாட்ட சத்திய ஜீவிய சக்தியால் முடியும். நம் அறியாமையால் இந்த அம்சங்கள் எதிரானதாகத் தோன்றுகின்றன. மனிதன் உலகில் ஏற்ற வாழ்வில் இவ்விரு அம்சங்களும் ஆன்மீக அம்சம். உலகின் நடைமுறைக்குரிய அம்சம். இயற்கை நம் அறியாமையில் செயல்படுகிறது. மனநிலைகட்குரிய செயல்களை நடத்த இயற்கை நம் அகந்தையின் மையத்தை நாடுகிறது. ஆன்மீக மையம் இரகஸ்யமானது. இயற்கை அதை நாடவில்லை. அகந்தை ஆன்மாவின் பிரதிநிதி. அகந்தையை மையமாகக் கொண்டு செயல்படுவதே நம் வாழ்வு. சிக்கலான, முரண்பாடான, இரட்டையான, தொடர்பற்ற நிகழ்ச்சிகளிடையே நாம் வாழ்கிறோம். இவை உலகின் இன்றைய நிலை. நம் அனுபவங்களையும் உலக சக்திகளுடன் உள்ள தொடர்புகளையும் நாம் அகந்தையைச் சுற்றி அமைக்கிறோம். அகந்தை மையம் மலை போல் நம் வாழ்வைப் பாதுகாக்கிறது. அனந்தத்திடமிருந்தும், பிரபஞ்சத்திடமிருந்தும் அகந்தை நம்மைக் காப்பாற்றுகிறது. ஆன்மீக மாற்றம் எழும்பொழுது இந்தப் பாதுகாப்பை நாம் கைவிட வேண்டும். அகந்தை மறைய வேண்டும். மனிதன் பொதுவான பரந்த மனநிலையில் கரைகிறான். இப்பரந்த பொதுவான மனநிலையில் செயலுக்குரிய முறையான செயல்படும் சட்டமில்லை. அதன் இரகஸ்யத்தை நாமறியோம். பொதுவாக மனிதன் இரண்டாகப் பிரிகிறான். ஒன்று உள்ளேயுள்ள ஆன்மீகப் பகுதி. அடுத்தது வெளியில் உள்ள இயற்கையான பகுதி. உள்ளே தெய்வீக சித்தி பூரண சுதந்திரமாக வீற்றுள்ளது. இயற்கையின் பகுதிகள் பழைய சுபாவத்தின் செயலைத் தொடர்ந்து செய்கின்றன. கடந்த கால சக்திகள் அதன் செயலை இவற்றிற்குக் கொடுத்துள்ளது. இயற்கையும் சுபாவமும் அதைத் தொடர்கின்றன. உள்ளே அனைத்தும் பிரம்மத்தால் ஜோதிமயமாக இருக்கும். அளவுக்குட்பட்ட மனிதன் முழுவதுமாகக் கரைவான். அத்துடன் பழைய அகந்தை மையமும் கரையும். இருந்தாலும் வெளியில் சுபாவம் தெளிவற்ற முரண்பாடுடையதாக இருக்கும். நாம் நம் செயலில் - புறத்தில் - ஜடமாக செயலற்று போய்விடுகிறோம். சந்தர்ப்பத்தாலோ, சக்தியாலோ நாம் செயல்படுகிறோம். அது சுயமான ஆத்ம சலனமாகாது. உள்ளே ஜீவியம் ஒளி பெறலாம். உள்ளே நாம் உலகையறியும் குழந்தையாகலாம். இக்குழந்தைக்கு ஆத்ம ஞானமுண்டு. ஆழ்ந்த அமைதியும் தெளிவும் உள்ளே செயல்படும்பொழுது வெளியில் எண்ணமும் செயலும் முன்னுக்குப்பின் முரணானதாக இருக்கும். தூய்மையும் நிதானமும் உள்ளே நிறைந்துள்ள பொழுது வெளியில் கட்டுக்கடங்காத ஒழுங்கீனமிருக்கும், அல்லது புறச் செயலில் ஒழுங்கான செயல்படும் முறையிருக்கலாம். அது மேலெழுந்த சாட்சியான அகந்தையின் செயலாக இருக்கலாம். அதை உள்ளேயுள்ள ஜீவன் ஏற்காது. அல்லது மனம் பெற்ற செயலின் சக்தியாக அது அமையலாம். அதனால் உள்ளே பெற்ற ஆன்மீக சித்தியைச் சிறப்பாக வெளிப்படுத்த முடியாமற் போகலாம். ஆன்மீக நிலைக்கும் மனத்தின் செயலுக்கும் இடையே இருக்க வேண்டிய நிதானமிருப்பதில்லை. அதிகபட்சம் உள்ளிருந்து ஞானம் வழிகாட்டும். அது ஒளியாலானது. இருந்தாலும் அவனது புறச்செயல்கள் மனம் வாழ்வின் குறையுடையதாக அமையும். திறமையற்ற மந்திரிகளையுடைய அரசன் நிலை போன்றது அது. அல்லது ஞானத்தை வெளியிடும் அறியாமையாகத் தோன்றும். அக வாழ்வில் உள்ள சுமுகம் புற வாழ்வின் செயல்களில் வெளிப்பட வேண்டும். சத்திய ஜீவியம் நம் வாழ்வில் வருவதால் அது நடக்கும். ஞானத்தின் சத்தியமும், மன உறுதியின் சத்தியமும் சிறப்பாக இணைவதால் இது சாத்தியமாகிறது. அறியாமையின் பண்புகளை சத்திய ஜீவியத்தால் அறிவின் பண்பாக்க முடியும் என்பதால் இது நடைபெறுகிறது.

நம் ஜீவனின் பகுதிகள் பூரணமடைய வேண்டும். அது சைத்திய புருஷனின் பூரணம். தெய்வீக மூலத்துடன் தொடர்பு கொள்வதால் அதைச் செய்யலாம். உயர்ந்த சத்தியத்தின் உண்மையை நாம் அங்குக் காணலாம். நமக்குரியது அது. இம்மாற்றத்திற்கு அது தவிர்க்க முடியாதது. ஏற்கனவே கண்டது போல், பூரண முழுமையை இங்குக் காண சத்திய ஜீவியத்தால் மட்டும் முடியும். இங்குள்ள நெருக்கம் சட்டபூர்வமான ஐக்கியம். வாழ்வின் ஒருமையுடன் தாழ்ந்த மனித வாழ்வை இணைப்பது சத்திய ஜீவியம். சத்திய ஜீவியத்தில் பூரணமாக இணையும் ஜோதியுண்டு. பூரணப்படுத்தும் சக்தி அங்குள்ளது. ஆனந்தலோகத்துள் அனந்தமாக நுழையும் உரிமையது. சைத்திய புருஷன் ஆதியான ஆனந்தமய புருஷனிலிருந்து வந்தவன். ஜோதியும் சக்தியும் அதை மீண்டும் ஆதிக்கு உயர்த்தும். இன்ப, துன்பங்களினின்று அது அவ்வழி விடுபடும். மனம், உயிர், உடலின் சுருக்கும் பயத்தினின்று அது மனிதனை விடுவிக்கும். உலக வாழ்வின் அம்சங்களைத் தெய்வீக ஆனந்த அம்சங்களாக்கவல்லது அது.

**பாராவின் தலைப்பு:**

1. வாழ்வு உயர்ந்து ஆனந்தத்தை நாடுகிறது.
2. ஆனந்தத்தைக் கண்டு அதை ஆட்கொள்வது வாழ்வின் பூரண நோக்கம்.
3. ஆனந்தம் எந்த உப தத்துவம் மூலம் வெளிப்படுகிறது என்பதை காண்போம்.
4. சைத்திய புருஷன் உண்மையான ஆத்மா. அது இருப்பவனை ஆத்மா என்கிறோம்.
5. ஆனந்தம் மேல் மனத்தில் சிதைந்து எதிராகிறது.
6. மனம் ஆனந்தத்தை 3ஆகப் பிரிக்கிறது.
7. அடி மனம் மேல் மனத்தை நிர்ணயிக்கும்.
8. ஆழ் மன ஆத்மா ரஸத்தை அறியும்.



9. ஆசை தன் நிலையிலேயே உழலும்.
10. ஆசைக்குப் பொதுவான உணர்ச்சியில்லை.
11. சைத்திய புருஷன் வெளிவருவது உச்சகட்ட வெற்றி.
12. சைத்திய புருஷனைக் கடந்த அற்புதமும் உண்டு.
13. சத்திய ஜீவிய திருவுருமாற்றம் முடிவு.
14. சத்திய ஜீவியம் அறியாமையை அறிவாக மாற்றவல்லது.
15. சைத்திய புருஷன் ஆனந்தத்தில் உற்பத்தியானவன் மீண்டும் அதை அடைவது உலகம் தெய்வீகமயமாவது.

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***பகவான் யோக வாழ்வின் காவியம் சாவித்ரி.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***உள்ளே போய் உலகை அறிவது ஞானம்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அகம் அவசரமறியாதது.***

## P.145 His personal nebula's constituent stars

### சொந்த சூழல், ஜாதக நட்சத்திரமாகி

☆ அவனுடைய சொந்த மண்டலக் கிரகங்கள்
☆ வாழ்வின் சூழலை ஆளும் திறமை
☆ குறிகெட்ட மக்கள் கூட்டத்தின் தலைவன்
☆ ஆபத்தான உலகில் பாதுகாப்பைத் தேடி ஒதுங்கும்
☆ சிறு உதவியாக அவற்றால் தன்னைச் சூழ்ந்து
☆ உலகை எதிர்த்து அனைவரையும் பொதுவாகத் திரட்டி
☆ எவரும் கண்டுகொள்ளாத உலகில் தனித்து, வலிமையற்று
☆ ஆதரவற்ற இதயத்தின் இரும்புக் கோட்டையென
☆ உடலின் தனிமைக்குத் தேடும் துணையென
☆ அடுத்தவர் என்பவர் எதிர்ப்பவரென அறிந்து
☆ பயந்து விலக்கும் பிற சக்தியென அறிந்து
☆ எதிரான வேற்று மனிதனென வெறுத்து மாய்க்கும்
☆ தனித்து காட்டு மனிதனாய் வாழ்ந்து
☆ உலகை எதிர்த்து தனித்து நின்று தலைவிதிப்படி
☆ செய்வதில் மூழ்கி, ஓடும் நாட்களைக் கண்டு
☆ அந்த நேரமே அனைத்துலகமாகி
☆ உலகை உயர்ந்தோர் வாழும் உயரிய இடமாக்க
☆ இறைவன் இதயத்தைத் தொட்டு ஆச்சரியப்படுத்தி
☆ பறக்கும் மணித்துளி பயிலும் சந்தோஷம்



☆ ஆசையைப் பிடித்து, ஆனந்த அனுபவத்தை வென்று
☆ அசைவும், வேகமும், வலிமையும் தரும் நிறைவு
☆ சண்டையும், ஆட்டமும் உடலின் உத்வேகமென
☆ கண்ணீரும், கலகலப்பும், அன்பு என அறிந்து
☆ போரிலும், வாழ்வின் தேவையிலும் வாழ்வனைத்தும் நாடும்
☆ பிரிந்தவர் கூட போடும் மல்யுத்தம்
☆ கவலை எழுப்பி, குதூகலத்தைத் தேடி
☆ பிரம்மத்தையறியாத அஞ்ஞான அனுபவம்.
☆ உலகத்து ஜீவன்களை ஆனந்த நம்பிக்கையளித்து
☆ இருளின் அரைத்தூக்கம் போரிட்டது
☆ புற உலகை தொட்டுணர்ந்து, கண்ணால் பார்த்து
☆ உணர்ச்சி உருவாயிற்று, நினைவின் உறக்கம் குழுமி எழுந்தது
☆ கடலெனும் கடந்த காலம் நிகழ்காலத்தில் தொடர்ந்தது
☆ உணர்வின் வேகம் அர்த்தமற்ற சிந்தனையாகி
☆ தடமாடும் கரங்கள் தடவிப்பார்க்கும் சத்தியம்
☆ கிடைத்த சிறியதைப் பிடித்து இழுத்துப் போற்றி

❋❋❋

**ஜீவிய மணி**

எதுவுமில்லாதது எல்லாவற்றையும் எதிர்பார்க்கும்.
காலியிடம் கணக்குப் போடும்.

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/76) 'மனிதன் ஏற்கக்கூடிய பொறுப்பை' நீ மறுக்கும் நேரம் கற்பனைக்கெட்டாத அதிர்ஷ்டத்தை வலிய விலக்குகிறாய் என அறிவதில்லை.**

☆ **கசப்பான கடும்பொறுப்பு கற்பனைக்கெட்டாத அதிர்ஷ்டம்.**

※ குழந்தைகள் பள்ளிக்கூடம் போவது அவர்கட்கு சிம்ம சொப்பனம்.

※ அது படும் அவதியைக் கண்டு பள்ளிக்கூடம் அனுப்ப முடியாது என்பதில்லை.

※ ஏதோ ஓர் பெற்றோர் அப்படியும் இருப்பதுண்டு.

※ அக்பர் அது போல் அடம்பிடித்துத் தற்குறியானார்.

※ பிற்காலத்தில் படித்த குழந்தைகள் வேலைக்குப் போகும் பொழுது, படிக்காதவன் மாடு மேய்ப்பான்.

※ பள்ளிக்கூடம் போகும் கசப்பான கடும்பொறுப்பு சர்க்கார் வேலைக்குப் போகும் அதிர்ஷ்டம்.

※ மாமியாரின் கொடுமைக்கு ஆளான பெண்ணுக்கு இப்படிப்பட்ட எதிர்காலமுண்டு என அவளிடம் முதலிலோ, முடிவிலோ சொல்ல முடியாது.

※ கொடுமையை இரசிக்கும் கொடுமைக்காரனிடம் அகப்பட்டு தாக்குப்பிடிக்காமல் ஓடிப்போனவன் பெரிய பஸ் முதலாளியானான்.

※ ஊரார் செய்த அநீதியை ஆயிரம் காலமாக அனுபவித்தவர் சமூக உச்சிக்கு வருவார் என்று எவரும் அவரிடம் அன்று கூற முடியாது.

※ இன்று ஒபாமா பிரசிடெண்ட் ஆனது நீக்ரோக்கள் அடிமைப்படுத்தப்பட்டதால் என உலகம் அறியுமா எனத் தெரியவில்லை.

※ 1000 ஆண்டு இங்கிலாந்து அடிமையாக இருந்ததினால் 200 ஆண்டு உலகை ஆண்டது.

※ 700 ஆண்டு இந்தியா அடிமையாக இருந்ததால், உலகத்திற்கு குருவாகும் என்று பகவான் கூறுகிறார்.

※ இதன் தத்துவத்தை யோகத்தில் பகவான் முதன்முதலாகக் கூறியுள்ளார்.

※ மனிதன் மனம் உடையவன், மனம் பகுதியானது.

※ மனம் கண்ட பிரம்மம் சச்சிதானந்த பிரம்மம்.

※ சத்திய ஜீவியம் முழுமையானது.

※ சச்சிதானந்தம் என்பது சத்.

※ அசத் அதற்கு எதிரானது.

※ சத்தும் அசத்தும் சேர்ந்த முழுமை பிரம்மம்.

※ உலகில் நல்வாழ்வு வாழ்ந்து மனிதன் சுவர்க்கத்திற்குப் போகிறான்.

※ அவன் தீமையை விலக்கி வாழ்ந்து சுவர்க்கத்தை அடைகிறான்.

※ தீமையும், நன்மையும் சிருஷ்டியின் பகுதிகள்.

※ தீமை நம் உலகில் இருள்; சத்தும் அசத்தும் சேர்ந்த முழு உலகில் நமக்குத் தீமையாகப்படுவது உயர்ந்த நன்மை.

※ நம் உலகில் தீமை எப்பொழுதும் நன்மையுடனிருக்கும், பிரிக்க முடியாது.

※ நன்மையை நாடினால் மனிதனுக்குச் சுவர்க்கம் கிடைக்கும்.

※ யோகி நன்மையுடன் தீமை சேர்ந்து வருவதால் இரண்டையும் விலக்கிப் பற்றற்றிருப்பான்.

※ அவன் பெறுவது ஆத்மாவுக்கு மோட்சம்.

※ தீமையை விலக்காமல் ஏற்பது கடினம், திருவுருமாற்றத்தால் ஏற்கலாம்.

※ அவன் உடல், பொருள், ஆவி, ஆத்மா அனைத்திற்கும் மோட்சம் பெறுகிறான்.

※ யோகிக்குத் திருவுருமாற்றம்.

※ குடும்பஸ்தனுக்குத் தீமை கொடுமை, தரித்திரம், துர்அதிர்ஷ்டம்.

※ அவனிடம் போய் தீமை உனக்குப் பெரும் அதிர்ஷ்டம் பெற்றுத் தரும் எனக் கூற முடியாது.

※ அவனுக்குத் தீமை கடமையாகப் பொறுப்பாக வரும்.

※ கசப்பான கடமையையும் பொறுமையாக ஏற்றுக்கொள் என அன்னை கூறுகிறார்.

※ திருஷ்டியிருந்து கசப்பான கடுமையின் பின் கற்பனைக்கெட்டாத அதிர்ஷ்டம் தெரிந்தால் நாளைக்கு அது வருவதால் இன்று பட முடியாது.

※ விழிப்பானவர் தீமையின் முனையில் உள்ள ஒளியை ஏற்றால் தீமை மனிதனுக்கு அவதி தராமல் பெரும் நன்மையாகத் திருவுருமாறும்.

※※※

**II/77) தடி எடுத்தவன் தண்டல்காரன் என்பது சச்சிதானந்தத்திலிருந்து ஜடம் வரை உண்மை. வலிமையுடையவனிடம் நியாயத்தை ஒப்படைப்பது அநாகரிகமான கொடுமை என்பது சரி. ஆனால் நியாயத்திற்கு அநாகரிகமான வலிமை வரும்வரை அது**



**செல்லாது என்பதும் உண்மை. மனம் சச்சிதானந்தத்தைப் போற்றினால் ஜடம் அதற்குட்படுவதில்லை. ஜடம் சச்சிதானந்தமானால் அது நடக்கும்.**

☆ **உண்மை எடுபட கொடுமையின் வலிமை தேவை.**

※ பலம், அதிகாரம், பதவி, வலிமை ஆகியவை அன்று முதல் இன்று வரை உலகை ஆள்கின்றன.

※ பலமும், பதவியும் அதிகாரம் தரும். வலிமை கொடுமையாக இயல்பாக மாறும். இவற்றைப் புறக்கணித்தால் தொழில் நடக்காது; குடும்பம் சிதையும்; ஊர் ரகளையாகும்; உலகம் அழியும்.

※ இவை உள்ளவர் நியாயமாக நடக்க வேண்டும்.

※ ஆத்மாவுக்கு நியாயமான பலம் உண்டு.

※ அதைச் செலுத்தாமலே ஆளும்.

※ அது உள்ளதே பலம், வலிமை, அதிகாரம்.

※ பெற்றோர்-பிள்ளைகள், கணவன்-மனைவி, நட்பில் இவை எழுவது பூலோகச் சுவர்க்கம்.

※ மேல் நாட்டிற்கும், இந்தியாவுக்கும் உள்ள வேற்றுமையைப் பகவான் கூறுகிறார்.

※ இங்கு வாழ்வு மையம், வாழ்வே எல்லாம்.

※ அங்கு ஆட்சி செய்வது மனம்.

※ மனத்தைப் பயன்படுத்தி வாழ்வை வளமாக்குவது மேல் நாடுகள்.

※ அவர்கள் பொய் சொல்வதில்லை, கொடுத்த வாக்கை மீறமாட்டார்கள், பிறர் விஷயத்தில் தலையிடமாட்டார்கள். மாதக்கணக்காகக் குளிக்காவிட்டாலும் வீடு, வெளியில் சுத்தம் கண்ணாடி போலிருக்கும். ரயில் 20 வருஷமான

பெட்டியானாலும், இன்றே செய்தது போலிருக்கும்.

※ இவ்வளவு உயர்வும் அந்நாட்டை உயர்த்தாது என்கிறார் பகவான்.

※ நம்மவர்கள் காலையில் எழுந்தவுடன் குளிக்கத் தவறுவதில்லை. ஆனால் எங்கும் எச்சில் துப்புவார்கள், வீடு அசுத்தமாக இருக்கும். வீதிகளை மல, ஜலம் கழிக்குமிடமாகப் பயன்படுத்துகிறோம்.

※ நாம் நாடுவது இறைவனை வாழ்வில் வெளிப்படுத்துவது.

※ உலகம் இதுவரை எண்ணாத அக்கருத்தை நாம் 2000 ஆண்டுகட்குமுன் எட்டினோம்.

※ கடந்த சில நூற்றாண்டுகட்கு முன் உலகிலேயே

- வளம் நிறைந்த நாடாகவும்,
- அறிவியலில் வெகு முன்னோடியாகவும்,
- சங்கீதம், சிற்பம், ஓவியம், நாட்டியத்தில் தலைசிறந்தும்,
- வணிகத்தில் உலகுக்கு வழிகாட்டியாகவும்,
- குடும்பம், சமூகம், சர்க்கார் நிர்வாகத்தில் அனைவரையும் கடந்தும்

இந்தியா விளங்கியது என பகவான் கூறுகிறார். நாடு ஒன்றுபடாமல் ஏராளமான பிரிவுகளாக ஆனதால் நாட்டின் ஆத்மா திறனிழந்துவிட்டது. அதனால் வாழ்வின் சிறுமைகளான வறுமை, நம்பிக்கையின்மை, நாணயமின்மை, பகட்டு, ஏமாற்று, இலஞ்சம், ஊழல், அந்நியனைத் துதிக்கும் நோக்கம், ஆதாய மனப்பான்மை வளர்ந்துவிட்டது. என்றாலும் அடிப்படை நிலையாக இருக்கிறது. நாட்டின் செல்வ நிலை உயராமல் அதன் பெருமை வெளிவராது. நமக்கே தெரியாது. அதனால் செல்வம் அபரிமிதமான செல்வம் அத்தியாவசியம்.

※ இன்று தார்மீகத் தலைமை என்று உலகிலிருந்தால், அது



இந்தியாவுக்கே.

※ ஆன்மீகத் தலைமையான ஜகத் குரு ஸ்தானம் இந்தியாவுக்குண்டு என்கிறார் பகவான்.

※ மக்கள் பலம், அதிகாரம், வலிமை, பதவி பெறாத வரை அவை எடுபடாது. நமக்கே நம்பிக்கை வாராது.

※ திரண்ட பெரும் செல்வம் அன்பர்க்குண்டு என *'அன்பு அமிர்தமாகி ஆனந்தம் அபரிமிதமாகும் அழைப்பு'* எழுதினேன். இந்தியன் ஒவ்வொருவருக்கும் அச்செல்வம் உண்டு என இன்று - புது வருஷம் 2011 - நான் நம்புகிறேன்.

※ இறைவனை உலக வாழ்வில் வெளிப்படுத்தும் பூலோக சுவர்க்கத்தின் வாழ்வு மையம் இந்தியா.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

**அன்னை என்ன செய்வார்களோ,**
**அதையே நான் செய்ய முனைவது அகந்தை.**
**அன்னையே அனைத்தும் செய்ய விழைவது சரணாகதி.**

**வாழ்க்கை கொடுத்ததை அடுத்தவர் கொடுத்ததாகவும் அறிவதுண்டு.**

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 65. வேலை தானே தன்னை நடத்திக் கொள்வது.

※ தானே நடப்பது இறைவன் நம் வாழ்வில் செயல்படுவது.

※ இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம் உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன் என்று பட்டினத்தார் கூறியது இறைவன் கொடுத்தாலன்றி உணவு தேவையில்லை எனக் கூறுகிறது.

※ **பக்தி, தவம் ஆகியவற்றிற்குச் சில அடையாளங்கள் உள.**

※ உடல் நலம், உள்ளத்தின் நிறைவைக் குறிக்கும்.

※ செய்யும் வேலை கூடி வருவதும் அதைக் குறிக்கும்.

※ தேடிப் போனவர் நாடி வருவதும் ஓர் அறிகுறி.

※ காரிய சித்தி என்பது வழக்கு.

※ உடல் நலம், காரியம் கூடி வருவது, மனிதர் செயல் அவற்றுள் பல கட்டங்கள் உள்ளன.

※ கைரேகை போல் காலிலும் சக்கரங்கள் இருக்கும்.

※ எதிர்கால மடாதிபதிகளுக்கும் அந்தச் சக்கரம் இருக்கும்.

※ சொல் நயம், குறிப்பறிந்து பேசுவது, நடப்பது, முன்யோசனை, சமயோசிதம் இறைவன் நம் வாழ்வில் செயல்படுவதைக் குறிக்கும்.

※ இந்த நயம் சூட்சுமமாக அறிபவர் எழுதப் படிக்கத் தெரியாதவனைப் பட்டம் பெறச் செய்யும்.

※ மடையனுடைய சிறப்பு மற்றவர்களை மடையன் என நினைப்பது.



※ அவனுடன் எவரும் தீவிரமான விஷயங்களைப் பேசமாட்டார்கள்.

※ **மடையன் தனக்குத் தெரியாததை அடுத்தவர்க்குத் தெரியாது எனக் கருதி மகிழ்வான்.**

※ மடையனின் மனநிலைகளைக் கடந்து வெல்பவன் வாயில் எழுவது இறைவனின் அசரீரி.

※ அவனுக்கு ஒரு விஷயத்தைக் கூறினால் "உன்னால் எனக்கு விளக்க முடியாது" எனச் சவால் விடுவான்.

※ அவன் சவாலை ஏற்க முடிவற்ற பொறுமை வேண்டும்.

※ மடையனுக்குப் பலமிருந்தால், அவன் மடையன் என்பதாலே ஜெயிக்கும்.

※ அறிவில்லாதவன் மடையன்.

※ சொரணையற்றவனுக்குரிய குறிப்பான சொல்லில்லை.

※ சொரணையற்றவன் தன் மடமையை வெளிப்படுத்தினால் "உன்னை நான் மடக்குவேன், ஜெயிப்பேன், நீ எதைச் செய்தாலும் அடுத்த கட்ட கயமை எனக்குதவும், எந்த நிலையிலும் எனக்குச் சொரணையில்லையே, உனக்குத் தெரியுமா? என்னை உன்னால் வெல்ல முடியாது" என்பான்.

※ **மடையன் "உன்னால் விளக்க முடியாது" என்பான். சொரணையற்றவன் "உன்னால் என்னை ஜெயிக்க முடியாது" என்பான்.**

※ உழைப்பால் முன்னேறும் நாடு இந்தக் கட்டங்களை positiveஆக நல்ல முறையில் எதிர்கொண்டு முன்னேறும்.

※ பண்பாலும், பக்குவத்தாலும், ஆன்மாவாலும் உயர்ந்த நாடு சீரழிந்தால், அது மீண்டும் உயரும் பொழுது மடையன், சொரணையற்றவன், கேவலமானவன் ஆகியவர்களைத் negative தவறான முறையில் எதிர்கொள்ள வேண்டும்.

※ லஞ்சம் இதில் பணத்தின் பங்கு.

※ துரோகம் விஸ்வாசத்தின் பங்கு.

※ நம் நாட்டில் பிரகிருதி (most opulent rich complexity) பெரிய சிறந்த சிக்கலாகத் தோன்றும். சிறப்பை எழுப்ப முயன்றபொழுது நாடு 560 பிரிவுகளாக இருந்ததால் முடியவில்லை.

※ வெளிநாட்டு ஆக்ரமிப்பால் நாட்டை ஒன்றுபடுத்த பிரகிருதி முயன்றது.

※ அதனால் இக்குறைகளைத் தவறான முறைகளில் சந்திக்கிறது.

※ இம்முறையில் அசத் (Non-Being)தின் அடிமட்டத்திலிருந்து மக்களை உயர்த்த வேண்டும்.

※ தாழ்த்தப்பட்டவர், ஒதுக்கப்பட்டவர், கொடுமைக்கு ஆளானவர் இம்முறையில் ஆட்சிக்கு வந்து அவர்களுடைய பண்பின் சிறப்பை நிலைநாட்டுவர்.

※ இது இன்றைய அரசியல் நிலை.

※ மடையனை வெல்வது மனிதனால் முடியாது.

※ அது முடிந்தாலும் சொரணையற்றவனை வெல்ல முடியாது.

※ இதுவரை உலகம் இவற்றை வெல்ல முயலவில்லை.

※ **அதற்கடுத்த கட்டம்: சொரணையற்றவன் திராணியற்றவனாகி குதர்க்கமானால் அவனை அவனிஷ்டப்படியும் வெல்ல முடியாது.**

※ நாடு ஜகத்குருவாக அதையும் எதிர்பார்க்கிறது.

※ அதையும் சாதிப்பவனுக்கு வேலை தானே தன்னை நடத்திக் கொள்ளும்.

*தொடரும்.....*

❋❋❋





## "மதம் என எனக்கு ஒன்றுமில்லை"

※ அன்னை சூட்சும உலகில் இரவில் தினமும் சஞ்சாரம் செய்வார்.

※ 1959 முதல் பகவானைச் சூட்சும லோகத்தில் சந்தித்தார்.

※ காலம் சென்ற சாதகர்களை அங்குச் சந்திப்பது வழக்கம்.

※ புராணி பழம்பெரும் சாதகர்.

※ பகவான் அழைப்பின் பேரில் யோகத்தை மேற்கொண்டவர்.

※ பகவானுக்கே உரிய நீல நிறம் - ஆசிரம கட்டிட சுண்ணாம்பு நிறம் - புராணியைச் சூழ்ந்த அழகை வர்ணிப்பார்.

※ எல்லா சாதகர்களையும், உயிருடனிருப்பவர் உட்பட அனைவரையும் சூட்சும உலகில் அன்னை சந்திப்பதுண்டு.

※ ஒரு சாதகர் தூங்கும்பொழுது அவரது சூட்சும உடலுடன் அன்னை பேசுவதுண்டு.

※ அது அந்தச் சாதகரை மறுநாள் கேட்டால் தெரியாது.

※ அன்னையின் தத்துவங்கள், கோட்பாடுகள் கனவில் கனவு ரூபமாக வரும்.

※ கனவில் கருத்து மாறி வரும், தலைகீழே தோன்றும், ஒன்றுக்கு மற்றதாகத் தோன்றும்.

※ கட்டடம் கனவில் வந்தால் மனத்தில் திட்டங்கள் உள்ளன எனப் பொருள்.

※ அது போல் ஒரு சமயம் பலரும் கூடியுள்ள இடத்திற்கு அன்னை வருகிறார்.

※ ஒவ்வொருவரும் ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்.

- ※ “என் மதமே மதம்” என்றார். அவர் கூறியதை அன்னை ஏற்று அவரைப் பின்பற்றினார். சற்று தூரம் போனதும் வழியடைத்துவிட்டது.
- ※ இதே போல் அனைவருடைய மதமும் பாதி வழியில் அடைபடுகின்றது.
- ※ வேறொரு இளைஞரைப் பார்த்தார்.
- ※ அவர் சாப்பிட அன்னைக்கு ஏதோ கொடுத்தார்.
- ※ ருசி அற்புதமாயிருந்தது.
- ※ அன்னை அவரை விசாரித்தார்.
- ※ அவர் சீனாக்காரர் போலிருந்தார். ஆனால் சீனாக்காரரில்லை.
- ※ உங்கள் மதம் எது? பாதை எது? என்றார்.
- ※ “எனக்கு மதம் என ஒன்றில்லை, பாதையில்லை” என்றார்.
- ※ வரையறையற்ற நம்பிக்கை உண்மையானது என்பதை இது காட்டுவதாக அன்னை கூறுகிறார்.
- ※ தன் வழியே வழி என்பவர் வழியை அறியாதவர்.
- ※ வழியேயில்லை என்பவர் எவரையும் கட்டுப்படுத்த விரும்பாதவர்.

***அதுவே மார்க்கம். அதுவே வழி.***
***மதம் என ஆரம்பித்தால் வழியடைபடும்.***

❋❋❋

**ஜீவிய மணி**

**நேர்மை சொந்தக் காலில் நிற்கும்.**



# Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 2)

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

N. அசோகன்

6. Finite செயல்பாடுகள் காலத்திற்குட்பட்டுப் பலனை மெதுவாகத்தான் வழங்கும். Infinite உடைய செயல்பாடுகள் காலத்தை முறியடித்து பலனை உடனே வழங்கும்.

மனிதனுடைய அகந்தை என்பது finiteஆன ஒரு விஷயமாகும். தன்னுடைய அகந்தையை நம்பி செயல்படுபவன் தன்னுடைய சொந்த அறிவு பலம், பண பலம், பதவி பலம், ஆள் பலம் என்று இவற்றை நம்பித்தான் செயல்படுகிறான். இதற்குண்டான பலன் என்பது மெதுவாகத்தான் வரும். இப்படிப்பட்டவர்கள் ஒரு கம்பெனி என்று ஆரம்பித்தால் சிறிய அளவில் ஆரம்பித்து அதைப் பெரிதாக்குவதற்குப் பத்து அல்லது பதினைந்து வருடங்கள் எடுத்துக் கொள்வார்கள். அரசாங்க அலுவலகத்தில் கிளார்க் வேலையில் சேர்ந்தால் சொந்தத் திறமையை நம்பி பணியாற்றுவதால் இவர்கள் ஆபீசராக ஆவதற்குள் சர்வீஸே முடிந்துவிடும். அகந்தையின் finite பலத்திற்கு இப்படித்தான் பலன் மெதுவாகத்தான் கிடைக்கும்.

அகந்தையினுடைய finite பலத்திற்கு நேர் எதிரானது ஆன்மாவினுடைய infinite பலம். தன்னுடைய Higher Selfஐ வெளிக்கொண்டு வந்து தன் வாழ்க்கைக்கான பொறுப்பை அதன் கைகளில் ஒப்படைத்து, அதன் சொல்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றவர் தன் வாழ்க்கையில் முன்னேற்றம் அதிவேகத்தில் வருவதைக் காண்பார். அன்னையிடம் வரும்பொழுது வெறும் ரூ.10,000/- மாத வருமானத்துடன் ஒருவர் வந்துள்ளார் என்றாலும் அவருடைய ஆன்மா அன்னையின் ஸ்பர்சத்தால் விழித்துக் கொண்டது என்றால் அந்த ரூ.10,000/- மாத வருமானம் ஓராண்டு

முடிவதற்குள்ளேயே இலட்ச ரூபாயாக உயர்வதை அவர் பார்க்கலாம். அகந்தையால் செயல்படுபவன் அதே 10,000 ரூபாய் வருமானத்தை இலட்ச ரூபாயாக உயர்த்துவதற்கு 20, 30 வருடங்கள் எடுத்துக் கொள்வான். 20 வருட முயற்சியை ஆன்ம பலத்தை வைத்துக் கொண்டு செயல்படுகின்றவர் ஒரு வருடமாகச் சுருக்கும் பொழுது அவரைப் பொறுத்தவரை பலன் கைமேல் உடனடியாக வந்துவிட்டதைப் போலத்தான் தெரியும். நம் வாழ்க்கையிலும் அகந்தையை ஒதுக்கி வைத்துவிட்டு ஆன்மாவை முன் வைத்து எந்த ஒரு பெரிய வேலையைச் செய்தாலும் நாம் எதிர்பார்ப்பதைவிட வேகமாக அந்த வேலை நிறைவு பெறுவதைப் பார்க்கலாம்.

7. Finite செயல்படும்பொழுது சிறியது, பெரியது, எண்ணிக்கை, தரம், உயர்வு, தாழ்வு என்ற வித்தியாசங்களுடன் தான் செயல்படுகிறது. ஆனால் Infinityக்குச் சிறியது, பெரியது, உயர்வு, தாழ்வு என்ற வித்தியாசங்களில்லை.

நம்முடைய செயல்பாடுகள் finiteஆக இருக்கும்பொழுது சிறிய பலனுக்குச் சிறிய முயற்சியும், பெரிய பலனுக்குப் பெரிய முயற்சியும் எடுக்க வேண்டும் என்று நினைக்கிறோம். மாதம் 10,000 ரூபாய் சம்பாதிக்கின்ற ஒருவர் தன்னுடைய வருமானத்தை இலட்ச ரூபாய்க்கு உயர்த்த விரும்பினால் தன்னுடைய உழைப்பையும், திறமையையும் பத்து மடங்கு உயர்த்த வேண்டும் என்று புரிந்து கொள்கிறார். அப்படி உயர்த்தாவிட்டால் தன் வருமானம் அந்த அளவுக்கு உயராது என்று நம்புகிறார். நம் மனநிலை finiteஆக இருக்கும்பொழுது இப்படி நினைக்கத் தோன்றுவது இயல்பு. இம்மாதிரியே மனிதனுக்குச் சில வேலைகள் கடினமானதாகவும், சில வேலைகள் சுலபமானதாகவும் தெரிகிறது. ஒரு வங்கியில் ஒரு கிளார்க்கைப் பார்த்து ஒரு விவரம் கேட்க வேண்டுமானால், சுலபமாக பார்த்துக் கேட்டு விடலாம். அதே வங்கியில் Regional



Managerஐப் பார்த்து ஒரு கடன் விஷயமாகப் பேச வேண்டுமென்றால், appointment வாங்குவதே கடினம். கிளார்க்கைப் பார்ப்பது சுலபம். Officerஐப் பார்ப்பது கடினம் என்று நம் அனுபவம் சொல்கிறது. நம்முடைய finite மனநிலைக்கு இப்படிப்பட்ட வித்தியாசங்கள் உண்மையாகத் தெரியலாம்.

ஆனால் அன்னையின் அருளை எடுத்துக் கொள்ளுங்கள். அது infinite ஆனது. அதற்குச் சிறியது, பெரியது, உயர்ந்தது, தாழ்ந்தது, மற்றும் quality, quantity என்ற வித்தியாசங்கள் கிடையாது. சிறிய விஷயங்களை எவ்வளவு சுலபமாக முடித்துத் தருகின்றதோ, அதே அளவுக்குச் சுலபமாகத்தான் பெரிய விஷயங்களை முடித்துத் தருகின்றது. ஒரு சிறுவனோ, சிறுமியோ தன்னுடைய பேனாவையோ, பென்சிலையோ தொலைத்து விட்டதாக வைத்துக் கொள்வோம். தொலைந்த பேனாவையோ, பென்சிலையோ அவர்கள் கண்டுபிடித்துத் தர வேண்டும் என்று அன்னையிடம் வேண்டினால் அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் அவர்களுக்குப் பேனா மற்றும் பென்சில் இருக்கும் இடத்தை அருள் காட்டிவிடுகிறது. இப்பொழுது ஓரன்பர் தன் வேலை பறிபோய்விட்டதாகவும், மீண்டும் தனக்கு ஒரு நல்ல வேலை வேண்டும் என்றும் அவர் அன்னையிடம் வேண்டுவதாக வைத்துக் கொள்வோம். நம்முடைய சிற்றறிவிற்கு என்ன தோன்றுகிறது? தொலைந்த பென்சிலைக் கண்டுபிடித்துத் தருவது சுலபம். ஆனால் இழந்த நல்ல வேலைக்குப் பதிலாக மீண்டும் ஒரு புதிய நல்ல வேலையைப் பெற்றுக் கொள்வது சிரமம் என்று தோன்றுகிறது. ஆனால் அருளுக்கு இந்த வித்தியாசங்களெல்லாம் இல்லை. எவ்வளவு சுலபமாகத் தொலைந்த பென்சிலைக் கண்டுபிடித்துத் தருகிறதோ, அவ்வளவு சுலபமாக இழந்த ஒரு நல்ல வேலைக்குப் பதிலாக இன்னொரு நல்ல வேலையையும் அருளால் அன்பருக்கு

வாங்கித் தர முடியும். நமக்குத்தான் பென்சில் சிறிய விஷயம், வேலை பெரிய விஷயம். ஆனால் அருளுக்கு இவை இரண்டுமே ஒன்றுதான். நமக்குத் தலைவலி என்றால் சிறிய விஷயம். ஆனால் கேன்ஸர் என்றால் பெரிய விஷயம். இரண்டு ஆஸ்பிரின் சாப்பிட்டால் தலைவலி விட்டுவிடும். ஆனால் கேன்ஸர் வந்து விட்டால் ஆறு மாதத்திற்கு treatment எடுக்க வேண்டும், பெரிய ஆப்பரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் எனது தகப்பனார் ஸ்ரீ கர்மயோகி அவர்களைக் கேட்டால் தலைவலியை எப்படி அருள் விரைவாக குணப்படுத்துகிறதோ, அவ்வளவு விரைவாகவே கேன்ஸர், அல்சர் மற்றும் டி.பி., சர்க்கரை வியாதி போன்ற பெரிய வியாதிகளையும் அருளால் குணப்படுத்த முடியும் என்று அவர் சொல்கிறார். நமக்கு நம்பிக்கை இவ்வளவு திடமாக இருப்பதில்லை என்பதால் இதற்கான நிரூபணங்களை நம் வாழ்க்கையில் நம்மால் பார்க்க முடியாமல் போகின்றது. நமக்குப் பார்க்கத் தெரியவில்லை என்பதால் அருளுக்கு இந்த ஆற்றல் இல்லை என்று அர்த்தமாகாது. எனது தகப்பனார் எதிர்பார்க்கும் அளவுக்கு ஒருவருக்குத் திடமான நம்பிக்கை இருந்தால் காலையில் ஒரு டாக்டர் அவருக்குக் கேன்ஸர் வந்துவிட்டது என்று சொன்னால், இவர் அன்னையிடம் சமர்ப்பணம் செய்துவிட்டு மாலையில் வேறு ஒரு டாக்டரிடம் second opinion வாங்கச் சென்றால், இரண்டாவது டாக்டர் இவருக்குக் கேன்ஸர் இருப்பதற்கான அறிகுறியே இல்லை என்று சொல்வார். காலை பத்து மணிக்கு ஆரம்பித்த தலைவலி அன்னைக்குப் பிரார்த்தனை செய்த பிறகு பத்தரை மணிக்கு விட்டுவிட்டால் அதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால் காலையில் இருப்பதாகச் சொன்ன கேன்ஸர் மாலையில் மறைந்துவிட்டது என்று சொன்னால் அதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இது நம்முடைய finite



மனப்பான்மையின் நம்பிக்கைக் குறைவைத் தான் காட்டுகிறதேயொழிய அருளின் ஆற்றல் குறைவு என்று காட்டாது. இம்மாதிரியே எவ்வளவு பெரிய ஆபீஸரை நாம் பார்க்க வேண்டி இருந்தாலும் அன்னையிடம் பிரார்த்தனை செய்துவிட்டு நாம் appointment கேட்டால் அதையும் அருளால் சுலபமாக நமக்கு வாங்கித் தர முடியும். நம்முடைய finite மனப்பான்மைதான் நாள்கணக்காக நாம் காத்திருக்க வேண்டும் என்று சொல்கிறது. ஆனால் appointment முதல் தடவை கேட்கும்போதே அது கிடைக்கும் என்ற பதிலை வாங்கித் தரக்கூடிய ஆற்றல் infinite levelலில் செயல்படக்கூடிய அருளுக்கு உண்டு.

8) Finite செலவு பண்ண விரும்புவதில்லை, சேமிக்கத்தான் விரும்புகிறது. ஆனால் Infinite செலவு செய்யும் பொழுது வளருகிறது.

நம் கையில் பணம் குறைவாக இருக்கும்பொழுது நமக்கு ஏதாவது ஒரு முக்கியச் செலவு வந்தாலும் அந்தச் செலவை நாம் செய்யத் தயங்கக்கூடாது. தைரியமாக நாம் அந்தச் செலவைச் செய்தால் நம் கையில் உள்ள பணம் தீரும்பொழுது கூடுதலாக நமக்குத் தேவைப்படுகின்ற பணம் புதிய வருமானமாக எந்த ரூபத்திலாவது வரும் என்று என் தகப்பனார் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் பணத்தைப் பற்றி கருத்து வெளியிட்டிருப்பது அன்னை அன்பர்களிடையே நன்றாகத் தெரிந்த விஷயமாக இப்போது இருக்கிறது. நம்முடைய குடும்பம் என்ற சிறிய அளவில் நாம் அதைப் பார்க்கிறோம். பெரிய அளவிலும் இதுவே உண்மை என்பதைத் தேசிய அளவிலும் நம் நாட்டு அரசாங்கமே பார்க்கலாம். நம் நாட்டில் ஏராளமான முன்னேற்றப் பணிகள் முதலீட்டிற்குப் பணம் போதவில்லை என்பதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கங்கையையும், காவிரியையும் இணைக்கின்ற நதி இணைப்புத் திட்டம்

இப்படித்தான் பல வருடங்களாக வெறும் பேச்சளவில் இருந்து கொண்டு செயல் வடிவம் பெறாமல் இருக்கின்றது. இதற்கு இலட்சம் கோடி ரூபாய் செலவாகும். அந்த அளவிற்குப் பணமில்லை என்பதால் திட்டத்தைக் கிடப்பில் போட்டுள்ளோம் என்று அரசாங்கம் கூறினால் இந்திய அரசாங்கத்திற்கு அப்பா திரு. கர்மயோகி அவர்கள் பின்வருமாறு சொல்வார்கள். 'இத்திட்டத்திற்கு 30,000 கோடி தான் இருக்கிறதென்றால் அந்தப் பணத்தைப் போட்டு வேலையை ஆரம்பியுங்கள். அரசாங்கப் பணம் தீருகின்ற கட்டத்தில் உலக வங்கியிலிருந்து கடனாகவோ, சர்வதேச AID Agenciesகளிடமிருந்து நன்கொடையாகவோ அல்லது உள்நாட்டிலிருந்தே இத்தகைய தேசிய முன்னேற்றப் பணிகளுக்கு உதவ விருப்பம் உள்ள பெரிய கார்ப்பரேஷன்கள் மற்றும் public sector நிறுவனங்களிலிருந்தும் நிதி உதவியும் பொருளுதவியும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே வேலையை ஆரம்பியுங்கள். பின்னர் என்ன நடக்கிறது என்று பாருங்கள்' என்று சொல்வார். அரசாங்கமும் இதை நம்பி வேலையை ஆரம்பித்தால் கையிலுள்ள பணம் தீரும் கட்டத்தில் கர்மயோகி அவர்கள் சொல்வது போலவே உலக வங்கியும், AID Agencyகளும் அவர்களே இந்திய அரசாங்கத்தை அணுகி, 'இது அருமையான திட்டம். செலவுக்குப் பணமில்லை என்று நிறுத்தாதீர்கள். மேற்கொண்டு ஆகும் செலவை நாங்களே கொடுக்கிறோம். அவசியம் வேலையைத் தொடருங்கள்' என்று சொல்வதை நாம் பார்க்கலாம். ஆக தேசத்தின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் உழைக்க முன் வருகிறது எனும்போது அங்கே Self-giving வருகிறது. அந்த Self-giving finiteஆன நிதித் தொகையை Infiniteஆக மாற்றுகிறது. கடைசிக் கோடி வரை செலவாகும் போது அதில் ஒரு perfection வருகிறது. அந்த perfectionம் finiteஐ Infiniteஆக மாற்றுகிறது.



9. Finite தனக்குத் தெரிந்ததும் மற்றும் வழக்கமானதும் மற்றும் சமூகத்தில் நடைமுறையில் இருக்கின்ற வழிகளிலும்தான் செயல்பட விரும்பும். ஆனால் infinite இப்படிச் செயல்படுவதில்லை. நமக்குத் தெரியாததும், இதுவரை நாம் பார்த்திராத புதிய வழிகளிலும் அதனால் செயல்பட முடியும்.

நமக்குப் புரிந்த வழிகளில்தான் செயல்பட வேண்டும் என்று Infiniteக்கு அவசியமில்லை. நம்முடைய finite மனப்பான்மைக்கு இதுவரை யாரும் செய்யாத வேலையை நம்மாலும் செய்ய முடியாது என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் Infinite அம்சம் கொண்டவர்கள் இப்படி நினைப்பதில்லை. மற்றவர்களால் செய்ய முடியாவிட்டால் என்ன, நம்மால் செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். அப்படியே செய்தும் காட்டுகிறார்கள். மனிதனால் பறவையைப் போல் பறக்க முடியாது என்று மானிட சமூகம் பரவலாக நினைத்தபொழுது பறக்கும் மெஷினை உருவாக்க முடியும் என்று அமெரிக்க கண்டுபிடிப்பாளர்களான ரைட் சகோதரர்கள் நம்பினார்கள். அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார்கள். காந்திஜீ அரசியலுக்கு வரும்வரையிலும் உலகச் சரித்திரத்தில் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு அடிமை ஆகியிருந்தது என்றால் வன்முறையிலும், போரிலும் இறங்கித்தான் தன்னுடைய சுதந்திரத்தை மீண்டும் பெற்றுள்ளது. ஆனால் ஆயுதம் எடுக்காமல், வன்முறையில் இறங்காமல் வெறும் அஹிம்சை மற்றும் சத்தியாகிரகத்தைப் பயன்படுத்தியே சுதந்திரத்தைப் பெறலாம் என்று காந்திஜீ அவர்களுக்குத்தான் தோன்றியது. இதுவரை உலகம் கண்டிராத ஒரு புதிய அணுகுமுறையாகும் இது. இது பலிக்காது, கூடி வராது என்று எல்லோரும் சொன்னார்கள். அவர் நம்மைப் போல finite மனப்பான்மை கொண்டவராக இருந்திருந்தால், பின்வாங்கியிருப்பார். ஆனால் அவர் Infinite மனப்பான்மை

கொண்டவர். அதனால் பின்வாங்கவில்லை. Non-violence பலிக்கும் என்று அவர் நம்பினார். ஆகவே முயற்சியைத் தொடர்ந்தார். வெற்றியும் கண்டார். புதுமையான செயல்பாட்டுக்குப் பகவான் மற்றும் அன்னையிடமே நமக்குச் சிறந்த உதாரணங்கள் இருக்கின்றன. 2000 வருடங்களாக இந்திய ஆன்மீக வரலாற்றில் பிறப்பு எடுப்பதிலிருந்து விடுபட்டு அதன் பலனாக உலகத்தில் உள்ள துன்பம், அறியாமை, பொய்மை என்று எல்லாவற்றிலும் இருந்து நிரந்தர விடுதலை பெற்று மோட்சத்தை நாடிப் போக வேண்டும் என்பதுதான் ஒரே ஒரு கண்ணோட்டமாக இருந்து வந்துள்ளது. இது finite மனப்பான்மைக்கு உண்டான மனோபாவம். அன்னையும் பகவானும் மட்டும்தான் வேறு புதிய கண்ணோட்டத்திலிருந்து படைப்பைப் பார்த்தார்கள். ஏன் படைப்பிலிருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும்? மாறாக அதை ஏன் திருவுருமாற்றம் செய்ய முயற்சி செய்யக்கூடாது என்று அவர்கள் இருவருக்கும் மட்டும்தான் தோன்றியது. இறைவனின் முழுமையையும், படைப்பின் முழுமையையும் உணர்ந்ததால்தான் பகவானும் அன்னையும் இப்படி நினைத்தார்கள். இந்த முழுப்பார்வை மற்றும் இந்தப் புதிய முயற்சி அவர்களுடைய Infinite தன்மையைக் காட்டுகிறது. முயற்சியில் அவர்கள் வெற்றி பெறவில்லை என்று பழைய ஆன்மீகத்தை ஆதரிப்பவர்கள் பேசலாம். ஆனால் பகவானுக்கும் அன்னைக்கும் அது ஒரு பொருட்டில்லை. திருவுருமாற்றம் பெற்ற சத்தியஜீவிய உடம்போடு மீண்டும் வருவோம் என்று அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்கள். நமக்கு வேண்டியது அவர்களுடைய புதுமையான கண்ணோட்டமும், புதுமையான முயற்சியும்தானே தவிர திருவுருமாறிய உடம்போடு நம்முன் காட்சி அளித்தார்களா, இல்லையா என்பதில்லை. நாம் செய்கின்ற வேலைக்குண்டான பலனை அடுத்த நிமிடமே வரவழைக்க



வேண்டும் என்ற அளவிற்கு நமக்குச் சிறப்பாக வேலை செய்யத் தெரிய வேண்டும். இருந்தாலும் அதே சமயத்தில் செய்கின்ற வேலைக்குண்டான பலனைப் பார்ப்பதற்குக் காலம் பூராவும் காத்திருக்க வேண்டுமென்றாலும், காத்திருக்கக்கூடிய Infinite பொறுமையும் வேண்டும் என்று பகவான் சொல்லியிருக்கிறார். அந்தப் பொறுமை அவரிடமே இருந்தது. நாமும் நம்முடைய செயல்பாடுகளில் இத்தகைய மனோபாவத்தை வெளிப்படுத்தினால் Infiniteனுடைய ஒரு அம்சமாவது நம்மைத் தொட்டதாக அமையும்.

10. Finite பிரிவினையின் மூலம் செயல்படுகிறது. மாறாக Infinite முழுமையின் மூலம் செயல்படுகிறது.

தனிமனிதனும் சரி, தனிக் குடும்பமும் சரி, தனி ஸ்தாபனமும் சரி, தங்களுடைய தேவைகள், தங்களுடைய சௌகரியங்கள் என்று இவற்றை மட்டுமே கருதி மற்றவர்களுடைய தேவைகள் என்ன? அவை நம்முடைய தேவைகளோடு ஒத்துப் போகிறதா என்பதையே கருதாமல் முழுமை எங்கிருக்கிறது என்பதையே உணராமல் செயல்பட்டு வருகிறார்கள். தனி மனிதர்கள், குடும்பங்கள், ஸ்தாபனங்கள் என்று மட்டும் இல்லை, மாநிலங்கள், தேசங்கள்கூட இப்படித்தான் இருக்கிறார்கள். இது Finite மனப்பான்மையினுடைய வெளிப்பாடு ஆகும். இதை நாம் வலியுறுத்திக் கொண்டேயிருந்தால் பிரச்சினைகள் வளரத்தான் செய்யுமே ஒழிய தீர்வோ, முன்னேற்றமோ கிடைக்காது. மாமியார் தன் சௌகரியத்தையும், மருமகள் தன் சௌகர்யத்தையும் மட்டும் வலியுறுத்தி வரும்பொழுது குடும்பத்தில் சுமுகம் போய்விடுகிறது. அம்மா மகனை 'என்கூட இரு' என்கிறார். மனைவியோ கணவனைப் 'பிரிந்து வாருங்கள்' என்கிறார். தாயாரை மகிழ்வித்தால் மனைவிக்கு அதிருப்தி, மனைவியை மகிழ்வித்தால் தாயாருக்கு அதிருப்தி. இப்படிப்பட்ட சிக்கலில் மாட்டிக்கொண்ட ஓர் ஆண்மகன் தாயார் என்றோ,

மனைவி என்றோ பார்க்காமல் ஒட்டுமொத்தக் குடும்பத்திற்கு எது நல்லதோ அந்தக் கோணத்திலிருந்து பார்த்துத் தாயாருக்குச் சில வரையறைகளையும், மனைவிக்குச் சில வரையறைகளையும் விதித்து அவற்றை அவர்கள் தாண்டி வராமல் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்து பொறுப்பாக நடந்து கொண்டார் என்றால் குடும்பம் என்ற முழுமை உயிர்பெற்று வரம்பில்லாத வளர்ச்சியைக் காணும். தனி மனிதனும் குடும்பங்களும் தான் இப்படி finite மனப்பான்மையோடு இருக்கின்றன என்று இல்லை. இந்தியா என்ற முழுமைக்கு உட்பட்டிருக்கின்ற மாநிலங்கள்கூட அந்த முழுமையையே உணராமல் நதி நீர் பங்கீட்டு விஷயத்தில் தகராறு செய்து கொள்வதைப் பார்க்கிறோம். காவிரி கர்நாடகத்திற்கும், மற்றும் தமிழகத்திற்கும் என்று இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான ஒரு நதியாகும். ஆனால், இந்த நதி நீரைச் சுமுகமாகப் பிரித்துக் கொள்வதில் எவ்வளவு தகராறு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். படிப்பறிவில்லாத இரண்டு கிராமவாசிகள்கூட ரூபாய் 100 பெறுமானமுள்ள ஒரு பொருளை ஒருவர் விற்கவும் அடுத்தவர் வாங்கவும் முயன்றால் முதல் 10 நிமிடம் பேரம் பேசுவார்கள். அரை டஜன் மாம்பழத்தை விற்கின்ற விவசாயி ரூபாய் 150ல் ஆரம்பிப்பான். வாங்குகின்ற எதிர் பார்ட்டி ரூ.75/-ல் ஆரம்பிப்பான். பத்து நிமிடம் பேசி பேரம் படியாமல் இருக்கின்றதை கவனிக்கின்ற மூன்றாம் நபர், 'பத்து நிமிடம் பேசியும் எந்த முடிவுக்கும் வரவில்லை. நீயும் பிழைக்க வேண்டும், அவனும் பிழைக்க வேண்டும். ஆகவே 150/-லும் இருக்க வேண்டாம், ரூ.75/-லும் இருக்க வேண்டாம். ரூ.100/-க்கு செட்டில் ஆகி விடுங்கள்' என்பார். அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு ரூ.100/-க்கு பேரம் படிந்து விற்பனையை முடித்துக் கொள்வார்கள். ஆகவே இந்த ரூ.100/- விற்பனையில் முழுமை என்ன? விற்பவனும் பிழைக்க வேண்டும்,



வாங்குபவனும் பிழைக்க வேண்டும். அந்த முழுமையை 10 நிமிடத்தில் உணர்ந்து படிப்பறிவில்லாத விவசாயிகள்கூட தங்கள் வேலைகளை முடித்துக் கொள்வார்கள். ஆனால் காவிரி நீர் விஷயமாக தமிழகமும் கர்நாடகமும் ஒரு முடிவுக்கு வராமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். கர்நாடகமும் பிழைக்க வேண்டும், தமிழகமும் பிழைக்க வேண்டும் என்றால் அந்தந்த வருடமும் காவிரி நீர் தேக்கத்திலுள்ள கொள்ளளவைப் பொருத்து அந்தந்த வருடம் எப்படி இருக்கின்ற தண்ணீரைப் பிரித்துக் கொண்டால் எல்லோரும் பயனடைவார்கள் என்று இரு மாநிலங்களும் செயல்பட்டால் இருவர் கண்ணோட்டத்திலும் ஒரு முழுமை வெளிப்படும். அந்த முழுமையில்தான் Infinite இருக்கிறதே ஒழிய 'உங்கள் தேவை எங்களுக்கு ஒரு பொருட்டே இல்லை. முக்கால்வாசித் தண்ணீர் எங்களுக்கு வேண்டும், மீதிக் கால்வாசிதான் உங்களுக்கு, பேசாமல் கொடுத்து விடுங்கள்' என்று கர்நாடகம் பேசினாலும் சரி, தமிழகம் பேசினாலும் சரி, அதில் finite மனப்பான்மை தான் வெளிப்படுகிறதே ஒழிய, அதில் முழுமையோ Infinityயோ இல்லவே இல்லை.

இப்படி நீயா, நானா என்று போட்டியிடாமல் நாம் எல்லோரும் இந்தியர்கள், ஆகவே விட்டுக்கொடுத்து அட்ஜஸ்ட் பண்ணிப் பழக வேண்டும் என்பதால் யாருக்கு அதிகம் தண்ணீர் தேவைப்படுகிறதோ அவர்கள் அதிகமாக எடுத்துக் கொள்ளட்டும் என்று பரந்த மனப்பான்மையுடன் செயல்பட்டால் நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினை நிரந்தரமாக மறைந்துவிடும். இந்தியாவிற்குள் மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை எவ்வளவு அவசியமோ அதே அளவிற்குச் சர்வதேச அளவிலும் தேசங்களுக்கிடையே ஒற்றுமை வர வேண்டும் என்பது மிகவும் அவசியமாகிவிட்டது. தேசங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும், போட்டி

மனப்பான்மையை வளர்த்துக் கொண்டும் செயல்பட்ட காலம் என்றோ முடிந்துவிட்டது. இப்பொழுதுள்ள தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் என்று இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது 1990க்கு மேல் உலகம் ஒன்றாகிவிட்டது. Physicalஆகவும் economicஆகவும் ஒன்றாகிவிட்டாலும் மக்களுடைய மனதிலோ அரசாங்கங்களின் இடையிலோ ஒற்றுமை உணர்வு இன்னும் முழுமையாக வரவில்லை. ஒன்றுபட்ட இந்த உலகத்தில் தனி இராணுவம் தேவையில்லை, தனித்தனி தேசிய currency தேவையில்லை. தனித்தனி employment policyயோ, economic policyயோ தேவையில்லை. மாறாக உலகம் முழுவதற்குமே ஒரு இராணுவம், ஒரு கரன்சி, ஒரு economic policy இருந்தாலே போதும் என்று என் தகப்பனார் திரு. கர்மயோகி அவர்கள் உலகப் பொருளாதார மாநாடுகளில் மதர் சர்வீஸ் சொஸைட்டியைச் சேர்ந்த திரு. Garry Jacobs போன்ற நிபுணர்களைப் பேசச் சொல்கிறார். இப்படிப்பட்ட ஒன்றுபட்ட செயல்பாடு உலக அளவில் உண்மை ஆகியது என்றால் பொருளாதார பிரச்சினைகள், அரசியல் பகையால் வெடிக்கின்ற போர் பிரச்சினைகள், சுற்றுச்சூழல் சீர்குலைந்து வருவதால் உண்டாகும் பிரச்சினைகள் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைகள் என்று இவையெல்லாம் முடிவுக்கு வரும் என்று அவர் திடமாக நம்புகிறார். அவர் எதிர்பார்க்கும் இந்த ஒற்றுமை உலகில் நிலைபெற்றது என்றால் Power of Infinity பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சுற்றுச்சூழலிலும், மக்களுடைய மனநிலையிலும் என்று எல்லா இடங்களிலும் வெளிப்படும். உலகத்தின் பொருட்செல்வம் அபாரமாகப் பெருகி எந்த நாட்டிலும் வறுமையின் சுவடே தெரியவில்லை என்று வரும். இராணுவத்திற்கே வேலையில்லை



என்ற அளவிற்கு உலகத்தில் அமைதி நிலவும். வருமானத்தைத் தேடிக் கொள்வதற்காக முழு நேரத்தையும் செலவழிக்கும் அவசியம் இல்லாமல் வேலை செய்யும் நேரம் குறையும். ஆனால் வருமானம் அதிகரிக்கும். மீதி இருக்கின்ற leisure hoursஐ மக்கள் உயர்ந்த நோக்கங்களுக்காகச் செலவு செய்யக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். ஒன்றுபட்டால் Infiniteடே நம் வாழ்க்கையில் உதயமாகும்பொழுது மனித சமுதாயம் ஏன் அந்த முயற்சியை எடுக்கக் கூடாது என்பதுதான் பகவானும், அன்னையும், என் தகப்பனார் திரு. கர்மயோகி அவர்களும் எழுப்புகின்ற கேள்வியாகும்.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

**பிறர் வெற்றிக்காக உழைக்க மனமில்லாவிட்டாலும்,**

**பிறர் வெற்றி நம் மனத்தை பூரிக்கச் செய்தால்,**

**அங்கு அன்னை வருவார்.**

**பிறர் வெற்றியை நம் வெற்றியாக கருதும் மனம்**

**அன்னையேயாகும்.**

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 7. மானஸீக உருவம்

அன்னையை வழிபடச் சிறந்த முறையை, 'நினைவே வழிபாடு' என நான் சொல்வதுண்டு. 'மனத் தூய்மையும், பக்குவமுமே அடிப்படை நிபந்தனைகள்' என்பதால், நினைவு, தூய்மையைச் சிறப்பாக்குகிறது. நெஞ்சம் தியானத்தில் நிறைவதுபோல் நிறைகின்றது. வழிபாட்டின் குறிக்கோள் அளவு கடந்து பூர்த்தியாகிறது.

இது பொதுவான உண்மை. சில பக்தர்களுக்கு மனம் எப்பொழுதுமே அன்னையிடம் நிலைத்திருப்பதுண்டு. அன்னையைக் கண்ட காட்சி கண் முன்னே நிற்கும். அன்னையின் அறை, அன்னையின் சமாதி, அன்னையின் பல படங்கள், அன்னை நடந்த இடங்கள் போன்ற எதுவுமே கண்ணையும், கருத்தையும் விட்டகலா. அவர்களில் சிலருக்கு அன்னையை நேரில் பார்ப்பதைவிட, மனத்தில் காண்பதே சிறப்பாகவும் இருப்பதுண்டு. மனம், மனக்காட்சி, மன நினைவு தீவிரம் பெற்று உண்மைக்குச் சமமாகவும், மேலாகவும் இருக்கும் தன்மையைப் பெற்றவர்களுக்கு மானஸீக வழிபாடு சிறந்தது. அவர்கள் அதில் லயித்துப்போவது உண்டு. வழிபாட்டு முறைகள் பல. அவற்றில் இதுவும் ஒன்று. இத்தன்மையான மானஸீக உருவகம் அமைந்துள்ளவர்களுக்கு இம்முறை சிறந்தது.

அன்னையின் பெயரை நினைப்பதற்குப் பதிலாக அன்னையின் உருவத்தை நினைப்பதே இம்முறையாகும். நினைவு நிறைந்து நெகிழும்போது நினைவில் வரும் அன்னையின் உருவம் படம் போலல்லாது, நிஜ உருவமாகவே மாறிவிடும். சிறப்பான நேரங்களில் அவ்வுருவம் ஒளிமயமானதாகவே மாறிவிடும். அக்காட்சி,



சிந்தனையைச் சிறப்பாக்கி, சிந்தனையிலேயே நம்மை லயிக்க வைக்கும். க்ஷண நேரம் தோன்றி மறைவதுண்டு. சில கணங்களுக்குத் தொடர்ந்து காட்சி அளிப்பதும் உண்டு. அக்காட்சி நிலையானதாகவே மாறி, கண்களை மூடினால் தெரியும் காட்சியாகவும் ஆவதுண்டு. கடைசிக் கட்டத்தில் கண்களைத் திறக்கும்பொழுது அன்னையின் ஜோதிமயமான உருவம் நிலையாகக் கண் எதிரே எப்பொழுதும் இருப்பதுண்டு.

பக்தனுக்கு அதைவிடப் பெரியது ஒன்றில்லை. அதை ஒரு சித்தியாகக் கொண்டு தம்மை மறந்து, அந்நிலையில் தம்மை இழந்திருப்பவரும் உண்டு. சிலருக்கு அன்னையின் பாதம், விரல்கள், தலை உச்சி, இதேபோல் தோன்றுவது உண்டு.

இத்தகைய திறமையுள்ள சிலர், தமது தியானத்தையே மானஸீக வழிபாடாக மாற்றிக்கொள்வார்கள். இவர்கள் அன்னையுடன் இரண்டறக் கலக்க மானஸீகமாக சூட்சுமத்திலும், மனத்திலும், நெஞ்சிலும், உடலிலும், ஆன்மாவிலும் முயன்றால் பலிக்கும்; பலன் அபரிமிதமாக இருக்கும்.

தலைக்கு மேலுள்ள சகஸ்ரதளத்திலிருந்து மூலாதாரம் வரை ஆக்ஞா சக்கரம், மணிபூரகம், அநாகதம் போன்ற ஏழு சக்கரங்கள் நம் சூட்சும உடலில் இருப்பதாகக் கூறுவதை நாம் அறிவோம். ஆனால் அன்னை, "12 சக்கரங்கள் உள்ளன. காலிலும், காலுக்கு கீழும் சக்கரங்கள் இருக்கின்றன" என்கிறார்.

அவற்றுள் ஏதாவது ஒரு சக்கரத்தில் அன்னையை உருவகப்படுத்தி நினைத்தால், அவ்வுருவம் உயிர் பெற்று, ஒளி பெற்று, காட்சி தந்து, நிலைத்து விட்டால், அது பெரிய முதற் கட்டமாகும். அன்னையின் அற்புதக் காட்சியில் நாம் திளைத்திருக்கும்பொழுது, சில சமயங்களில் அன்னையின் உருவம் பகவான் ஸ்ரீ அரவிந்தர் உருவமாகவும் மாறுவதுண்டு. அன்னையின் சூட்சும உடல் ஸ்ரீ அரவிந்தராகவே மாறிவிடுவதால், நம்முடைய

சூட்சுமப் பார்வையில் தெரியும் அன்னையின் உருவம் அதனுள் உள்ள சூட்சுமத்தையும் வெளிப்படுத்துவதுண்டு. ஒவ்வொரு சக்கரத்திலும் இது போன்ற காட்சியைப் பார்க்க முயன்று, பூர்த்தி செய்தால், நம் சூட்சுமச் சக்கரங்கள் அனைத்தும் அன்னையால் நிரம்பப்பெற்றது ஆகும். அதன் வழியே நம் சூட்சும தேகம் முழுவதும் அன்னையால் (Mother's Consciousness) நிரம்ப வாய்ப்புண்டு. சூட்சும தேகத்தில் ஒரு செயல் பூர்த்தியானால், பின்னர் அது ஸ்தூல தேகத்தில் நடைபெறும்.

அன்னையின் ஒளியைச் சக்தியை (Consciousness), உருவத்தை மனத்தில், புத்தியில் நிலையாகக் காண்பது சிறப்பு. ஆனால் அது எளிதன்று. அது நிலைத்துவிட்டாலோ நாம் பேசுவதற்குப் பதிலாக நம் மனத்தில் உள்ள அன்னையின் ஒளியைப் பேசச் சொல்லலாம். சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடிய முறை இல்லை அது; பலிப்பது கஷ்டம்; பலித்தாலும் ஓரளவே பலிக்கும். மனத்தின் வெளிப்பாடான பேச்சு முழுதும் அன்னையின் வெளிப்பாடானால், புத்தி ஜோதி மயமாகும். அதுவும் அன்னையின் ஜோதி மயமாகும். இது உயர்ந்த நிலை. நாம் பேச ஆரம்பிக்கும்பொழுது நம் எண்ணத்தைப் பேசுகிறோம். சமர்ப்பணம் செய்துவிட்டால், அன்னையை நினைத்து நம் எண்ணத்தைப் பேசுகிறோம். சமர்ப்பணம் செய்துவிட்டு நாம் பேசுவதற்குப் பதிலாக, நம் மனத்தில் உள்ள அன்னையின் ஒளி பேச நாம் காத்திருந்தால், பொதுவாக பேச்சு எழாது. நாம் பேசலாம், அல்லது பேசாமல் இருக்கலாம். மாறாக, ‘அன்னையின் ஒளி பேசட்டும்’ என முனைந்திருந்தால், ஓரிரு சொற்கள் வெளிவரும். அவை தெளிவாக இருக்கும். அதைப் பயின்று மேலும் மேலும் முயன்றால், அனுபவிக்கலாம்.

இதே பயிற்சியை நெஞ்சில் அன்னையை நினைத்து, நம் உணர்வு வெளிப்படுவதற்குப் பதிலாக, ‘அன்னையின் ஜோதி வெளிப்படுத்தும் உணர்வே வெளிப்படட்டும்’ என முயன்றால், முயற்சி வெற்றி பெற்றால், சிறிதளவு வெற்றி பெற்றாலும், அது பெரிய



பாக்கியம். உடல் எல்லாம் பூரித்து, உள்ளுணர்வு எல்லாம் வெள்ளப்பெருக்கெடுக்கும் ஒளியாகி, மனத்தின் சிறுமை எல்லாம் கரைந்து, இன்பப் பெருக்கில் நாம் திளைப்போம்.

அடுத்த கட்டத்தில் அதே விதமான முயற்சியை உடலிலும் எடுக்கலாம். உடலின் திறன் ஆயிரம் மடங்காக மாறும். க்ஷண நேரம் அனுபவித்தாலும், ஆயிரம் மடங்கு பலம் வந்தது போலத் தோன்றும். பலன் எதுவானாலும், அன்னையை மனத்திலும், மனத்தின் வெளிப்பாட்டிலும், உணர்ச்சியிலும், உணர்வை வெளிப்படுத்துவதிலும், உடலிலும், உடலின் செயலிலும் சூட்சுமமாக உணர்வது ஒரு பெரிய ஆன்மீகச் சிறப்பாகும்.

அன்னையின் திருவுருவத்தைச் சக்கரங்களில் கற்பனை செய்ததுபோல் (கரணங்களில், மனம், உடல்களில் செய்தது போல்) ஆன்மாவின் உறைவிடத்திலும் காண முயலலாம். மனத்தில் ஒளியுடன் காணப்படும் உருவம் ஆன்மாவில் சித்தித்தால், அது ஆன்மீக ஒளியுடன் தெரியும். அன்னைக்கு இயற்கையானது வெண்ணிற ஒளி. வைர ஒளி அன்னைக்குச் சிறப்பான அம்சம். சைத்திய புருஷனிலும், ஆன்மாவிலும் அன்னையை மானஸீகமாகக் காணலாம். அந்த அந்த இடங்களில் இக்காட்சி பலிப்பது அரிது. உடலின் பகுதிகளில் - தலை, கழுத்து, உடல், கை, கால்களில் - அன்னையின் உருவத்தை மானஸீகமாகக் காண முடியலாம். உடலை 100, 200 சிறு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் அன்னையை, அன்னையின் ஒளியைக் கற்பனை செய்யலாம். சில சமயங்களில் ஒரு பகுதியில் அன்னையைக் காண முயலும் பொழுது, அப்பகுதி அன்னையின் உடலின் பகுதியாகவே தெரிவதும் உண்டு.

மேலும் நாம் சந்திக்கும் நபர்களை எல்லாம் அன்னை பிரதிநிதிகளாகவோ, அன்னையாகவோ நினைத்துப் பழகலாம். நம் கற்பனையில் திறம் இருந்தால், அவர்களுடன் பழகும்பொழுது அன்னை அந்தச் சந்திப்பில் வெளிப்படுவதைக் காணலாம்.

நாம் இருக்கும் இடங்கள், பயன்படுத்தும் பொருள்கள்,

சந்திக்கும் நபர்கள், நிகழும் நிகழ்ச்சிகள், கேட்கும் ஒலி, பார்க்கும் காட்சிகள், நினைக்கும் நினைவுகள், உணர்வுகள், செயல்கள், அசைவுகள், அனைத்தையும் அன்னையின் அசைவுகளாகவோ, ஒளியாகவோ, அன்னையாகவோ காண முயன்று வெற்றி பெறலாம்.

இடைவிடாத நினைவு (constant remembrance), இடையறாத காட்சி (constant presence) ஆகியன யோகப் பயிற்சிகளில் முக்கியமானவை. அவை பலித்தால் பின்னர் நம் உள்ளுணர்வு அன்னையுணர்வாகவும், புறச் செயல் அன்னையின் செயலாகவும், கரணங்கள் (இந்திரியங்கள்) அன்னைக்கே உரித்தனவையாகவும், ஜீவன் அன்னையாக மாறுவதுமான அற்புதங்களைக் காணலாம்.

இறுதியாகக் கூறுபவை எல்லாம் பெரிய யோக சித்திக்கே ஒப்பானவை. சிரத்தையோடும், தவ முயற்சியோடும் பின்பற்றுபவர்களுக்குப் பலன் உண்டு. அதே பலன் இல்லாவிட்டாலும், அதே போன்ற பலனை எளிமையான பக்தனும் ஓரளவு பெற வழியுண்டு. அன்னையின் ஒளி உடல் முழுவதும் தழுவினாற்போல் மானஸீகமாகப் பலித்தால், பின்னர் ஒவ்வோர் அங்கத்திலும் புகுந்து நிரம்பி வழியும்படி நினைத்து, அதுவும் பலித்தால், ஒவ்வோர் அணுவிலும் (cell) உள்ள கருவில் அன்னையின் வெள்ளொளி சென்று தங்குவதைக் காணலாம். பின்னர் அணு ஒளியால் நிரம்புவதைக் காணலாம். அதே ஒளியைப் பொன்னொளியாகப் பாவித்தால், அவ்வொளியில் அணு நிரம்பி, செறிந்து வழிவதாகக் கண்டால், அன்னைக்கு நம் உடலால் செய்யும் சரணாகதி பூர்த்தியானதாக அர்த்தம். சில சமயங்களில் அவ்வொளிப் பொறி அன்னை உருவத்துடனும் காணப்படும். அது சிறப்பு. பகவான் ஸ்ரீ அரவிந்தரின் பொன்னிற உருவத்துடனும் காணப்படும். அதுவே கடைசிக் கட்டமான பலன். அது முழுமையான யோகப் பலன். உடலிலுள்ள ஆன்மீகக் கரு, அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் பொன்னொளியை ஏற்றுக்கொள்ளும் உயர்ந்த நிலை.

*தொடரும்....*

❋❋❋





# யாருக்காக

சந்திரசேகரன்

மாலை ஆறு மணிக்கு நான் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியபோது இருட்டிவிட்டது. இறைவன் வாழ்வில் வரும் தருணத்தில் மனிதன் மீது பொழியப்படும் அடையருளை அவன் அலட்சியப்படுத்தும்போது, அது மெல்லக் குறைந்து மறைந்துவிடுவதைப் போல, அதிகாலை முதல் பெய்து கொண்டிருந்த அடைமழை மெல்லக் குறைந்து, தூறலாகி, மாலையில் நின்றுவிட்டிருந்தது. தன்னலமற்ற அன்பை பிறருக்குத் தர மறுக்கும் அகம்பாவி, எவரோடும் கலந்துறவாடாமல் பிரிந்தே வாழ்ந்து சமூகத்திற்கு பிரச்சனை ஆவதைப் போல, மனிதனால் வீதியில் வீசியெறியப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களும், பிளாஸ்டிக் பைகளும் இயற்கையின் உடலான மண்ணோடு மட்கிக் கலக்காமல் தனித்தே இருந்ததால் மழைத் தண்ணீர் வடியாமல், மண்ணிற்குள் போக முடியாமல், தேங்கி நின்று, நான் அடுத்த அடி வைக்கப்போவது பாதையிலா, பள்ளத்திலா என்ற குழப்பத்தை உருவாக்கிக் கொண்டிருந்தது. எதிர்பார்ப்புகள் தந்த ஏமாற்றங்களால் வறண்டுபோன இருண்ட வாழ்வை தன்னந்தனியாக எதிர்கொள்ளும் மனிதனுக்கு, எதிர்பாராமல் கிடைத்த பெண்ணின் ஒளிமிகுந்த பேரன்பு புதிய நம்பிக்கையைக் கொடுப்பதைப் போல இருண்டு விரிந்த கிடந்த வானத்தின் நடுவில் ஒளி வீசியபடி உருண்டோடிக் கொண்டிருந்த சிறு பூவேலைப்பாடு செய்யப்பட்ட வட்ட வடிவ பீங்கான் தட்டு போன்ற வெண்ணிலா எனக்கு உற்சாகத்தைத் தந்து, கூடவே என் மனைவி ஜமுனாவின் முகத்தையும் நினைவுப்படுத்தியது. வீட்டை நோக்கி வேகமாக நடந்தேன். வீடு விளக்கேற்றப்படாமல் இருண்டிருந்தது. அக்கம்பக்கத்திலிருந்த எல்லா வீடுகளிலும் விளக்குகள் எரிந்து

கொண்டிருந்ததால் என் வீடு அதிகமாக இருண்டு தெரிந்தது. ஒளியைச் சுற்றி இருள் இருப்பது இயல்பே. இருளைச் சுற்றி ஒளி இருந்தது சற்று வித்தியாசமாக இருந்தது. வாசல் கதவு திறந்தே கிடந்தது. படுக்கை அறையில் மாயமான நீலநிற வெளிச்சம் தெரிந்தது. மெல்ல மின்விசிறி சுழலும் சத்தமும் கேட்டது. திருமணமான தினத்திலிருந்து ஒரு நாள் கூட மாலையில் ஜமுனா விளக்கேற்றாமல் இருந்ததே இல்லை. என்ன ஆயிற்று அவளுக்கு?

படுக்கை அறையில் தளர்வாக கட்டி வைக்கப்பட்ட பட்டுச்சேலை மூட்டை போல கட்டில் மேல் என் பெண் காயத்ரி படுத்துறங்கிக் கொண்டிருந்தாள். அவளை அணைத்தபடி ஜமுனா கழற்றி வைக்கப்பட்ட மலர்மாலை போல ஒருக்களித்து சுருண்டு படுத்திருந்தாள். அவளருகே ஒரு புத்தகம் திறந்து கிடந்தது. "ஜமுனா" என்று மெல்ல அழைத்தேன். அவள் கண் இமைகளை சிறிது திறந்ததும், "என்ன ஆயிற்று?" என்று கேட்டேன். "கூடத்திற்குப் போகலாம். இங்கே எதுவும் பேசவேண்டாம்" என்று சைகை காட்டிய ஜமுனா, எழுந்து சேலையை திருத்திக் கொண்டு என்னோடு அறையை விட்டு வெளியே வந்தாள்.

"உனக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டேன். "எனக்கென்ன? நன்றாகத்தான் இருக்கிறேன். காயத்ரிதான் வயிற்றுவலி என்று மத்தியானமே பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்துவிட்டாள்" என்றாள் ஜமுனா.

"டாக்டரிடம் அழைத்துப் போனாயா?" என்று கேட்டேன். "போன் செய்தேன். டாக்டர் இரண்டு நாட்கள் ஊரில் இருக்கமாட்டாராம். அதனால் போகவில்லை" என்றாள் ஜமுனா.

"எனக்கு போன் பண்ணியிருக்கலாமே?" என்று கேட்டேன். "அங்கே நீங்கள் என்ன வேலையாக இருப்பீர்களோ? நானே சமாளித்துக் கொள்ளலாம் என்று தோன்றியதால் போன் செய்யவில்லை. காயத்ரி 'வலி, வலி' என்று சொல்லிக்கொண்டே இருந்தாள், தூங்கவே இல்லை. காய்ச்சல் வேறு அடித்தது. அடிவயிற்றில் விளக்கெண்ணெய் தடவிவிட்டேன். வயிற்றை லேசாக



அழுத்திவிட்டுக்கொண்டே தீவிரமாக பிரார்த்தனை செய்தேன். அரைகுறையாகத் தூங்கினாள். நடுநடுவே விழித்துக்கொண்டு அழுதாள். காயத்ரி குணமடைய வேண்டும் என்ற நினைப்போடு 'சாவித்ரி' புத்தகத்தை எடுத்து மெதுவாக சில பக்கங்களை வாசித்தேன். எப்படியோ தூங்க ஆரம்பித்துவிட்டாள். காய்ச்சல் இன்னமும் குறையவே இல்லை" என்றாள் ஜமுனா.

"காலையிலிருந்து என்னவெல்லாம் நடந்தது? எல்லாம் சரியாக இருந்தால் உடம்பு கெட்டுப்போகாதே!" என்றேன். காலையிலிருந்து என்ன நடந்தது என்று யோசிக்க ஆரம்பித்தேன். ஜமுனாவும் யோசிக்க ஆரம்பித்தாள்.

காரணமில்லாமல் காரியமில்லை. எது காரணம் என்பது காண்பவரைப் பொறுத்து மாறுகிறது. பாட்டியைக் கேட்டால், 'திருஷ்டி பட்டுவிட்டது. சுற்றிப்போடு, சரியாகிவிடும்' என்கிறாள். மருத்துவரிடம் கேட்டால், 'இது கிருமிகளின் செயல். மருந்து சாப்பிட்டால் சரியாகிவிடும்' என்கிறார். ஆன்மீகவாதி, 'அகத்தில் காரணத்தைத் தேடி, தவறை சரி செய்தால் நோய் தீரும்' என்கிறார். திருஷ்டி கழித்துவிட்டு, மருந்தை சாப்பிட்டுவிட்டு, அகக்காரணத்தை தேடும் ஜீவன்களும் உலகில் உண்டு. எது சரி, எது தவறு? சரியும், தவறும் மனிதரின் நிலையை பொறுத்து மாறத்தான் செய்கின்றன. அடுத்தவருக்கு ஒத்துவருவது எனக்கு ஒத்துவரும் என்று யாரால் உத்தரவாதம் தரமுடியும்?

சிறிது நேர மௌனத்திற்கு பின் பெருமூச்சு விட்ட ஜமுனா, "இன்று மதியம் வேலைக்காரி வேலைக்கு வரவில்லை. யாரோ ஒரு பெண் மூலம் 'எனக்கு காய்ச்சல், வேலைக்கு வரமாட்டேன்' என்று சொல்லி அனுப்பி இருந்தாள். எனக்கு கோபம் வந்தது" என்றாள். "என்ன கோபம்?" என்று கேட்டேன். "ஏதாவது பொய் சாக்கு சொல்லி வேலைக்கு வராமல் இருப்பதுதான் இவளது வழக்கம். நான் ஜென்மம் எடுத்ததே கேட்கும்போதெல்லாம் இவளுக்கு சாப்பாடு, துணி, பணம், விடுப்பு தருவதற்காகத்தான் என்ற நினைப்பில் வாழ்கிறாள். வேலை செய்ய வேண்டும் என்ற நினைப்பே இல்லை. நானில்லை என்றால்

ஒரு வேளை சாப்பாடு நிம்மதியாக சாப்பிட முடியுமா என்று நினைப்பதே இல்லை. இவள் மட்டும் என்றில்லை, எல்லா வேலைக்காரர்களுமே இப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள் ஜமுனா.

இருண்டிருந்த கூடத்திற்குள் சன்னல் வழியே வந்த வெண்ணிலாவின் ஒளிக்கரங்கள், தரையில் செவ்வக வடிவ ஒளிச்சித்திரங்களை வரைந்திருந்தன. நிலாவைப் போலவே தன்னைத் தருவதற்கு பிறரிடம் அனுமதி கேட்டு காத்திராத குளிர்ந்த தென்றல் என்னையும் ஜமுனாவையும் மென்மையாக வருடிக் கொடுத்துவிட்டு, போகிறபோக்கில் தான் எங்கிருந்தோ சுமந்துகொண்டு வந்திருந்த ஜாதிமல்லி வாசத்தையும் கூடம் முழுவதும் பரப்பிவிட்டுச் சென்றது.

நானும், ஜமுனாவும் ஒரே சமயத்தில் சன்னல் வழியே தெரிந்த வானத்தை நோக்கி எங்கள் பார்வையைத் திருப்பினோம். சின்னக் கவலைகளையும், சிறிய ஆசைகளையும் ஒரு கணம் மறந்துவிட்டு நிலவொளி ததும்பும் விழிகளால் ஆர்வத்தோடு வானத்தை அளந்தோம்.

''அப்பப்பா வானம் எப்படி விரிந்து கிடக்கிறது! பெரிய, பெரிய நட்சத்திரமெல்லாம் சின்னச் சின்ன மூக்குத்தி போலத் தெரிகிறது. எத்தனை யுகங்களாக இவையெல்லாம் இருக்கின்றன! பிரம்மத்தின் பிரம்மாண்டமான படைப்பின் முன் நாமெல்லாம் வெறும் தூசி. அதன் காலமற்ற காலத்தில் நம் வாழ்நாள் என்பதே ஒரு கணம்தான். எல்லா மனிதர்களின் கற்பனையையும், கனவுகளையும் ஒன்று திரட்டினாலும் இந்த பிரம்ம படைப்பின் முன் அது கடலில் தோன்றும் நீர்க்குமிழிதான்'' என்று பரவசமான குரலில் கூறினாள் ஜமுனா.

''ஆமாம் ஜமுனா, பிரம்மத்திற்குதான் நம்மீது எத்தனை பிரியம்! இறைவன் நமக்காக, நம் சந்தோஷத்திற்காக இத்தனையையும் படைத்திருக்கிறார்'' என்றேன். சட்டென்று திரும்பி என்னைப் பார்த்தாள் ஜமுனா. அக்னித் தழலில் தீப்பொறி சிதறுவது போல, நிலவொளி வீசிய அவள் கண்களில் மின்னலொன்று தெறித்தது. பின் கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் யோசித்தாள்.



''கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்களேன். இவை அத்தனையும் நமக்காகவா இருக்கின்றன? மனிதன் தோன்றுவதற்கு முன்பே இவை இருக்கவில்லையா? மனித குலமே மறைந்துவிட்டாலும் இவை இருக்கத்தானே செய்யும்? நமக்குத் தெரியாத சக்தி ஏதோ ஒரு பெரிய லட்சியத்திற்காக இவற்றையெல்லாம் படைத்திருக்கலாம். எப்பேர்ப்பட்ட கட்டற்ற, அளவற்ற சக்தி இது! உங்களுக்கும் எனக்கும் வேலை வாங்கித் தருவதும், வீடு கட்டித் தருவதும், கல்யாணம் செய்துவைத்து, பிள்ளை பெற வைப்பதும்தானா இவ்வளவு பெரிய சக்தியின் லட்சியமாக இருக்க முடியும்?'' என்று கேட்டாள் ஜமுனா.

அவள் பேச்சிலிருந்த தர்க்கத்தின் தெளிவும், மெய்யின் வலிமையும் என் இருப்பை, என் வாழ்வை, என் ஆளுமையை, என் அகந்தையை மிகச் சிறியவையாக உணர வைத்தன. என் சிறிய உருவத்தை உற்றுப் பார்த்துப் புன்னகைக்கும் ஆயிரம் யானைகளின் முன்னிற்கும் சிற்றெறும்பாக என்னை உணர்ந்தேன். ''நான் முழு மூடன்! கண் சிமிட்டும் நேரத்தில் மனிதனின் சிறுமையை, இயலாமையை, அறியாமையை புரிய வைத்துவிட்டாய். படைத்தவன் முன் மனிதன் ஒரு பொருட்டே அல்ல'' என்றேன்.

''அந்த நினைப்பும் சரியில்லை. பிரம்மத்திற்கு நாமும் முக்கியம் என்றுதான் நினைக்கிறேன். 'சர்வம் பிரம்மம்' என்று சொன்ன பெரியவர்கள் 'சமம் பிரம்மம்' என்றும் சொல்லி இருக்கிறார்களே!'' என்றாள் ஜமுனா.

''சமம் பிரம்மம் என்பது சரிதானா? சன்னல் வழியே தெரியும் சூரிய மண்டலத்தைப் பார். நம் தோட்டத்து மரத்தின் கீழே இருக்கும் எறும்புப்புற்றையும் பார். இரண்டும் சமமா? பார்த்தாலே எறும்புப்புற்று சிறியது என்பது தெரிகிறதே?'' என்றேன்.

''அது அளவைப் பற்றிய அறியாமை. அளவு நாம் பார்க்கும் விதத்தில்தானே இருக்கிறது? மலை உச்சியில் நின்று கொண்டு பார்த்தால், பக்கத்தில் இருக்கும் மரம் பெரியதாகவும், கீழே இருக்கும் பத்துமாடிக் கட்டிடம் சின்ன பொம்மை போலவும் தெரியும். அது பார்வைக்கு உண்மை போலத் தோன்றினாலும் நாமிருக்கும் நிலையில்

கொள்ளும் பார்வையின் பிழைதானே?'' என்றாள் ஜமுனா.

''அளவை விடு. கல்லில் சிற்பம் செதுக்குவதைவிட அரிசிமணியில் சிற்பம் செதுக்குவது மிகவும் சிரமமானது, மிகவும் நுணுக்கமாக செய்யப்பட வேண்டியது. எறும்புப்புற்று எத்தனை சிறியது! அதைச் செய்வது எவ்வளவு கஷ்டம்! பெரிய சூரிய மண்டலத்தைப் படைப்பதைவிட, சிறிய எறும்புப்புற்றைச் செய்வது சிரமம். அந்த வகையில் தரத்தில் எறும்புப்புற்று உயர்ந்ததுதானே? இங்கே சர்வம் பிரம்மம் எப்படி செல்லுபடியாகும்?'' என்று கேட்டேன்.

"இது தரத்தைப் பற்றிய தவறான நினைப்பு" என்றாள் ஜமுனா. "இதுவும் தப்பா!" என்றேன். புன்னகைத்தாள் ஜமுனா. அவளது மோகனப் புன்னகைக்கு விலையாக சூரிய மண்டலத்தையே தரலாம்.

''கல்யாணம் செய்துகொண்டு, மனைவி ஆனதும் என் பெண்மையை உங்களுக்கு முழுமையாகத் தந்தேன். குழந்தை பெற்று தாயானதும், என் தாய்மையை குழந்தைக்கு முழுமையாகத் தந்தேன். இரண்டு நிலைகளிலும் நான் பூரணமாகத்தான் என்னைத் தந்தேன். குழந்தையைப் பார்த்துக்கொள்வது சாதாரண காரியமா என்ன! எத்தனை கவனமாக செய்ய வேண்டிய காரியம்! தாய்மையின் கடமையை நுணுக்கமாகச் செய்வதால், நான் உங்களுக்குத் தந்த பெண்மை தரம் குறைந்ததாகிவிடுமா? பெண்மையைத் தராவிட்டால் தாய்மை எங்கிருந்து வரமுடியும்?'' என்றாள் ஜமுனா.

"நீ சொல்வது உண்மைதான். கணவனின் கைகளை அழுத்திப் பற்றுகிறாய், குழந்தையின் கைகளை மென்மையாகப் பற்றுகிறாய். வலிமையான காரியத்தையும், மென்மையான காரியத்தையும் சமமான பிரியத்தோடு செய்கிறாய்" என்றேன். "பிரியம் சமமானது என்றாலும், மனைவியாக இருப்பது வேறு, தாயாக இருப்பது வேறு" என்றாள் ஜமுனா.

"குழந்தையையும், என்னையும், வீட்டையும் பார்த்துக் கொண்டு வேலையும் பார்க்கிறாய். வாழ்க்கையைப் பற்றிய தத்துவத்தைப் பற்றியும் யோசிக்கிறாய். இதுவரையில் உன்னைப் புரிந்துகொள்ள நான் ஒரு



முயற்சியும் எடுக்கவில்லை. 'எனக்காக நீ இருக்கிறாய், எனக்கு செய்ய வேண்டியது உன் கடமை' என்று சுயநலமாக இருந்துவிட்டேன். 'உன்னுடைய ஆசைகள், தேவைகள் என்ன? உனக்காக நான் என்ன செய்ய வேண்டும்?' என்றெல்லாம் ஒரு தடவைகூட நான் நினைத்துப் பார்த்ததே இல்லை" என்றேன்.

''எதையாவது சொல்லாவிட்டால் உங்களுக்கு பொழுது போகாதே! நான் கேட்காமலே எனக்கு வேண்டியதை நீங்கள் செய்து கொடுப்பது எனக்குத் தெரியாதா என்ன? நம் கணக்கை விடுங்கள். நமக்காகத்தான் இருக்கிறது என்று பிரம்மத்தைப் பற்றி நாம் போடும் கணக்கு சரிதானா? இத்தனை காலமாக என் மனம் போட்ட கணக்கெல்லாம் கள்ளக்கணக்கு. 'எனக்கு நான்தான் முக்கியம். என் சந்தோஷத்திற்காகத்தான் எல்லாமே இருக்கின்றன' என்று என்னை அறியாமலேயே வாழ்ந்துவிட்டேன். நான் மட்டுமே எனக்கு முக்கியமாகிவிட்டேன். எனக்காக பிரம்மம் இருக்கிறது என்று நினைத்துவிட்டேன். அசல் அறியாமை! இது அகந்தையின் ஆணிவேர். 'பிரம்மத்திற்காக, அதன் லட்சியத்திற்காக நானிருக்கிறேன்' என்ற நினைப்போடு இனிமேல் வாழப்போகிறேன்'' என்றாள் ஜமுனா.

"அப்பா" என்று மெல்லிய குரலில் கூறிக்கொண்டு படுக்கை அறையிலிருந்து வெளியே வந்தாள் காயத்ரி. கூடத்து மின்விளக்கை எரியவிட்ட ஜமுனா அவளை அணைத்து தூக்கிக்கொண்டாள். "நன்றாகத் தூங்கி எழுந்ததில் முகம் தெளிவாகிவிட்டது. காய்ச்சலும் சுத்தமாக இல்லை" என்றேன்.

குழந்தையின் உடல் நிலையை மறந்து பிரம்மபோதத்தில் ஆழ்ந்திருந்த ஜமுனா, ''எனக்காக பிரம்மம் இருக்கிறது, என் விருப்பப்படி அது செயல்பட வேண்டும் என்ற என் நினைப்பு சரியென்றால், தனக்காகத்தான் ஜமுனா இருக்கிறாள், தன் விருப்பப்படி ஜமுனா செயல்பட வேண்டும் என்று வேலைக்காரி நினைப்பதில் தவறொன்றுமில்லையே! நானும், வேலைக்காரியும் ஒரே ரகம்தான். அவள் மாறுகிறாளோ இல்லையோ, நான் இனி

மாறப்போகிறேன்" என்றாள்.

"அம்மா, அம்மா" என்று திறந்திருந்த வாசல் கதவின் வழியாக வேலைக்காரியின் குரல் கேட்டது. மிகவும் களைத்துப்போன தோற்றத்தோடு நின்றுகொண்டிருந்த வேலைக்காரி, ஜமுனாவைப் பார்த்ததும், "அம்மா, பாப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டேன். தனியாக சிரமப்படுவீர்களே என்பதால் என்னால் முடிந்தவரை ஏதேனும் செய்து கொடுத்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றாள்.

இவள் வேலைக்காரிதானா? அல்லது அவள் சாயலில் இருக்கும் வேறு யாரோவா? வேலைக்காரியின் போக்கு எனக்கு ஆச்சரியத்தை தந்தது போலவே ஜமுனாவுக்கும் ஆச்சரியத்தைத் தந்தது என்பது அவளது முகபாவத்திலிருந்து தெரிந்தது. "காய்ச்சல் என்றாயே!" அவள் நெற்றியை லேசாகத் தொட்டுப் பார்த்தாள் ஜமுனா.

"எழுந்திருக்க முடியாத அளவிற்கு காய்ச்சல்தான். பாத்திரமாவது கழுவிக் கொடுத்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். நாளை முடியவில்லை என்றால் அக்காவை அனுப்பி வைக்கிறேன். அவளையும்கூட நீங்கள் காலை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம். நன்றாக வேலை செய்வாள். நீங்கள் கொடுக்கும் சம்பளத்தை சந்தோஷமாக வாங்கிக் கொள்வாள்" என்றாள் வேலைக்காரி.

"காய்ச்சலோடு ஏன் தண்ணீரில் கை வைக்க நினைக்கிறாய்? நாளை பார்த்துக்கொள்ளலாம்" என்றாள் ஜமுனா. "அதையெல்லாம் பார்த்தால் ஒரு வேலையும் நடக்காது" என்று கூறிக்கொண்டே சமையலறையை நோக்கி வேலைக்காரி நடந்தாள். "கொஞ்சம் பொறு, காபி தருகிறேன்" என்று அவள் பின்னோடு சென்றாள் ஜமுனா.

ஜமுனாவின் கண்களில் மகத்தான பிரபஞ்சம் ஒளியோடு ஒரு கணம் காட்சி தந்தது. அக்காட்சி உண்மையானதா அல்லது என் பிரமையா என்று தெரியவில்லை.

*முற்றும்.*

❁❁❁



# Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

51. Tradition values highly prophecy.
**Prophecy, for Sri Aurobindo, can prevent pregnant possibilities of the Spirit.**
தீர்க்க தரிசனத்தை, முன்னறிந்து கூறலை, மரபு பெரிதும் மதிக்கிறது.
**ஆன்மாவில் வித்தாக இருக்கும் சாத்தியங்களை முன்னறிந்து கூறல் தடை செய்யும் என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**

52. The Gita is the pinnacle and acme in the traditional effort.
**Sri Aurobindo begins where the Gita. He says the Gita stops short of the goal.**
மரபு வழி முயற்சியின் உச்சம், சிகரம், கீதை.
**கீதை முடியுமிடத்தில் ஸ்ரீ அரவிந்தர் தொடங்குகிறார். கீதை இலக்கை அடையுமுன் நின்றுவிட்டது என்கிறார்.**

53. In many ways, the tradition is an organized popular belief as in rebirth. Popular belief, in spite of its popularity, carries the stigma of superstition.
***Nowhere does Sri Aurobindo allow the entry of superstition.* He demolishes superstition like Copernicus by an invincible logic.**
மரபு என்பது, மறுபிறப்பை போன்ற, பல வழிகளிலும் முறைப்படுத்தப்பட்ட பரவலான நம்பிக்கை. பரவலாக நம்பப்பட்டாலும், அவற்றில் மூடநம்பிக்கையின் மாசு உண்டு.
**ஸ்ரீ அரவிந்தர் மூடநம்பிக்கையை எங்கும் அனுமதிப்பதில்லை. கோபர்னிகசைப் போல வெல்ல முடியாத தர்க்கத்தின் மூலம்**

**மூடநம்பிக்கையைத் தகர்க்கிறார்.**

54. God and Man are separate in the tradition.
**They are inextricably one in Him. One is the other, One is in the other.**
மரபில் கடவுளும், மனிதனும் வெவ்வேறானவர்கள்.
**ஸ்ரீ அரவிந்தர் அவர்கள் பிரிக்க முடியாத ஒருவரே என்கிறார். அவரே இவர். அவரில் இவருண்டு.**

55. Common sense is a consummate guide to the tradition.
**Sri Aurobindo accepts common sense as long as it serves comprehensive wisdom.**
மரபில் பொதுபுத்தியே இறுதி வழிகாட்டி.
**விவேகத்திற்கு சேவை செய்யுமளவிற்கு மட்டுமே பொதுபுத்தியை ஸ்ரீ அரவிந்தர் ஏற்றுக் கொள்கிறார்.**

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

**நடக்கும் நல்ல காரியங்களை அருள் செய்வதாகவும் நடக்காததை தம் குணம் மறுத்ததாகவும் புரிந்து கொள்வது அறிவுடைமை.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# பக்குவம்

மொழி பெயர்ப்புக்கு இடம் தராத அளவு நம் பண்புக்குரிய சொல் பக்குவம். அன்னைக்குரிய மன நிலையின் நுட்பத்தைக் குறிப்பது பக்குவம். இது தொடர்பான இதர சொற்கள் இதம், இங்கிதம், பதம், பவித்ரமாகும். ஒரு பெரிய சொத்து, சம கூட்டாளிகள். வாய்மொழியான ஏற்பாடானதால் ஒருவரை அடுத்தவர் முழுவதும் ஏமாற்ற முடிவு செய்து பதினொரு வருஷ காலமாகத் தகராறு. அன்பருக்கு எழுத்தில் உரிமையில்லை. பத்து வருஷமாக நடந்தவையில் அன்பர் முழுவதும் அன்னை முறையைப் பின்பற்றினார். அடுத்தவர் ஏமாற்றுவதுடன், போட்டி மனப்பான்மை, கசப்பு வளர்த்துக் கொண்டார். ஒரு வழியாக முடிவு காண சொல்ப விலைக்கு விற்க அடுத்தவர் முன் வந்தார். தகராறில் அதுவும் பலன் தரவில்லை. “பெரு நஷ்டமானாலும் உனக்கில்லை” என்ற மனப்பான்மை கசப்பாகிவிட்டது. அடுத்தவர் கூறும் விலைக்கு இருமடங்கு கொடுத்து வாங்க அன்பருக்குச் சம்மதம். அதுவும் கசப்பால் முடியாது. அன்பர் அடுத்தவர்க்குத் தெரியாத அன்பரை போனில் கூப்பிட்டு கூட்டாளியிடம் சொத்தை இருமடங்கு விலைக்கு வாங்கச் சொன்னார். விற்பவர் போன் நம்பர் வாங்கினவரிடம் உண்டு. அவருக்கு நினைவில்லை. உதவும் அன்பருக்கு நம்பரைத் தேடி அனுப்புவதாகக் கூறினார். உதவ வந்த அன்பர், “வேண்டாம், நானே விற்பவர் நம்பரை தேடிப் பெறுகிறேன்” என்றார். இது பக்குவம். அடுத்த பத்து நிமிஷத்தில் பேரம் போனில் முடிந்தது.

***பக்குவம் பரமாத்மா போற்றும் இனிமை.***

❋❋❋

# சொல்லிச் செய்வது

வேலைக்கழகு சொல்லாமல் செய்வது. Silent Will சொல்லாமல் செயல்படுவது. கேட்க வேண்டியதைக் கேட்காமலிருந்தால் அதிகமாக நடக்கும் என்பது அன்பர் அனுபவம். கேட்காமலே எல்லாக் காரியங்களும் நடப்பது ஓரளவு யோக சித்தியெனக் கூறலாம். முடிய வேண்டிய காரியம் அளவிலும் தரத்திலும் அடுத்த கட்டத்தைச் சேர்ந்தது எனில் அதைக் கேட்காமல் செய்ய முடியாது. கேட்டே பெற வேண்டும். அதுவும் கேட்காமல் நடக்கும் நேரம் வந்துவிட்டால் கேட்காமலிருப்பது நல்லது. கேட்டுப் பெறுவதைத் தாண்டிக் கேட்காமல் பெற ஆரம்பித்து, அதையும் கடந்து கேட்டுப் பெறும் நிலையும் வந்தபின் அன்பர் நிலை சித்து விளையாடும் யோகியின் நிலையாகும். மகான்கள் சித்து விளையாட விரும்புவதில்லை. பெரிய மகான்கள் சித்து விளையாடியிருக்கிறார்கள். மிகப் பெரியவர் சித்து விளையாட மறுத்தும், விளையாடியும் வாழ்ந்தனர் என பகவான் எழுதியிருக்கிறார். அன்பர் கேட்டுப் பெறும் விஷயத்தில் இந்த மூன்று கட்டங்களிலும் செயல்படும் தகுதி பெற்றபின் அவர் மன நிலை

***சித்து விளையாடும் யோகியின் மனநிலையாகிறது.***

❋❋❋

Vol. II Issue 9 December 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| **ESSAYS ON ACCOMPLISHMENT**<br>N.Asokan | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

| பாண்டியில் | சென்னையில் |
|---|---|
| மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,<br>5, புதுவை சிவம் தெரு,<br>வெங்கட்டா நகர் விரிவு,<br>புதுச்சேரி - 605 011.<br>✆: (0413) 2212443, 2210514 | மாம்பலம் தியான மையம்,<br>23/1, மேற்கு சாலை,<br>மேற்கு C.I.T. நகர்,<br>சென்னை - 600 035.<br>✆: (044)-24347191 |

Vol. II Issue 9 December 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**டிசம்பர் 2012**